பக்கங்கள்: பன்னிரண்டு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 21 வியாழக்கிழமை (03-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:191



புலிக்கொடி போர்த்தப்பட்ட நிலையில் நடேசனின் பூதவுடல் அடங்கிய பேழை.
(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## நடேசனின் இறுதிக்கிரியை இன்று பகல் நெல்லியடியில்!

யாழ்ப்பாணம்,ஜூன்3

மூத்த தமிழ் ஊடகவியலாளரான நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நெல்லியடியில் இடம்பெறவுள்ளன.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பின் எல்லை வீதியில் அமைந்துள்ள தமது அலுவலகத்துக்குச் சென்ற சமயம் வழியில் காத்திருந்த துப்பாக்கிதாரியின் சூட்டுக்கு இலக்காகி அதே இடத்தில் ஊடகவியலாளர் நடேசன் உயிரிழந்திருந்தார்.

அவரின் பூதவுடல் மட்டக்களப்பிலஅவரது வாசஸ்தலத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. அதன் பின் நேற்று முன்தினம் வவுனியாவுக்கும் பின்னர் கிளிநொச்சிக்கும் எடுத்துவரப்பட்டது. அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுக்காலைவரை பூதவுடல் விடுதலைப் புலிகளின் ஊடகத்துறை அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அதன்பின் நேற்றுக்காலை கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு, நினைவுக் கூட்டம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும், பொது அமைப்பின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் அஞ்சலியுரையாற்றினர்.

அங்கிருந்து தமிழீழக் காவல்துறையினரின் பாதுகாப்புடன் முகமாலைக்கு நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துவரப்பட்ட பூதவுடலை முகமாலை சூனியப்பிரதேசத்தில் வைத்து யாழ். மாவட்ட நடேசன் நினைவு ஏற்பாட்டுக் குழுவினர் பொறுப்பேற்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நடேசன் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# வடக்கில் துக்கம்; கிழக்கில் ஹர்த்தால்

# அம்பாறை நகரில் கண்டனப் பேரணி!

### தமிழர் தாயகம் எங்கும் இயல்புநிலை பாதிப்பு

கொழும்பு,ஜூன்3

**சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து அம்பாறை நகரில் நேற்று சிங்கள ஊடகவியலாளர்கள் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி நடந்தது. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்கள் உட்பட கிழக்குப் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் யாழ். குடாநாட்டிலும், வன்னியிலும் முழு அளவில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தச் செயற்பாடுகளால் தமிழர் தாயகம் எங்கும் நேற்று இயல்பு நிலை முற்றாகப் பாதிப்புற்றது.**

நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்தும் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இதுபோன்ற கொலைகள் இடம்பெறக்கூடாது என்று வலியுறுத்தியும் - குடாநாடு முழுவதிலும் வன்னியிலும் நேற்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்தன. போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டிருந்தன.

பொதுவாக மக்களின் நாளாந்த பணிகள் யாவும் முடங்கியிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வாழைகளும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. ஒலி பெருக்கி மூலம் சோக கீதம் இசைக்கப்பட்டது.

வன்னிப் பகுதியிலும் நேற்றுத் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

**திருமலையில்**

மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஐ.நடேசனின் படுகொலையைக் கண்டித்து திருகோணமலையிலும் நேற்று மாலை கண்டனப் பொதுக் கூட்டமும் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றன.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், ஊடகவியலாளர்களான

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் ஒருவருக்காக அம்பாறையில் நடைபெற்ற முதலாவது ஆர்ப்பாட்டம்

அம்பாறை,ஜூன்3

நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனின் படுகொலையைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியே, அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மகன ஒருவருக்காக நடத்தப்பட்ட முதலாவது ஆர்ப்பாட்டப் பேரணியாகும். இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவினத்தவரும் பங்கேற்றிருந்தனர்.

அம்பாறையில் இடம்பெற்ற மத நிகழ்வொன்றில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று கலந்துகொண்ட சமயத்தில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடததப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

## நடேசன் படுகொலையைக் கண்டித்து ஜூன் 10 இல் யாழ்ப்பாணத்தில் பேரணி

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்தும் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இதுபோன்ற படுகொலைகள் தொடரக்கூடாது என்று கோரியும் -.

எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை குடாநாடு தழுவியதாக மாபெரும் கண்டனப்பேரணி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து அமைத்துள்ள 'நடேசன் நினைவு ஏற்பாட்டுக் குழு' வின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் குடாநாட்டில் சகல செயற்பாடுகளையும் நிறுத்தி, சகலதர

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதற்கு இலங்கை-இந்திய அரசுகள் தயார்

இலங்கையிலும் இந்தியாவிலும் புதிய அரசுகள் பதவியேற்றிருப்பதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் பழைய திட்டம் தற்போது மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இத்தகைய உத்தேச ஒப்பந்தத்துக்கான முன்மொழிவு இலங்கையின் முன்னைய அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால், அவரது இந்திய விஜயத்தின்போது புதுடில்லியில் ஆட்சியிலிருந்த பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. வாஜ்பாய் அரசு இது விடயத்தில் கொள்கை அளவில் ஆக்கபூர்வமான சமிக்ஞை காட்டிய போதிலும் அதற்கு மேல் இவ்விடயம் அதிகம் நகரவில்லை.

இரண்டு தரப்புகளிலும் ஆட்சியிலிருந்த அரசுகள் புதிய பொதுத்தேர்தல்களை எதிர்நோக்கியமையும் அதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

எனினும், உத்தேச ஒப்பந்தத்துக்கான பரிந்துரைகளை நகல்வடிவில் இலங்கைத் தரப்பு இந்தியாவுக்குக் கையளித்திருந்தது.

தற்போது இந்தியாவிலும் புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் தினத்தையொட்டி எழுச்சி நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்3

தமிழீழ மாணவர் எழுச்சி நாளான எதிர்வரும் 6ஆம் திகதி எழுச்சி நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகத் தமிழ் மாணவர்கள் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பேரினவாதத்திற்கெதிராகப் புறப்பட்ட அண்ணன் சிவகுமாரன் விடுதலைக்காக வித்தாகிய புனித நாளான ஜூன் 6ஆம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சோனியா, மன்மோகனை சந்தித்தார் கதிர்காமர்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது ஆறுநாள் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அவர் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நட்வர்சிங், பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஷிட் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகளைச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் பற்றிக் கலந்தாலோசித்தார்.

இலங்கை திரும்புவதற்கு முன்னர் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

புதிய அரசாங்கம் இந்தியாவில் பதவி ஏற்றவுடன் அங்கு சென்ற முதல வெளிநாட்டுத் தூதர் கதிர்காமர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அரசின் பழிவாங்கும் செயல்களுக்குப் பதிலடியாக

# எதிர் நடவடிக்கை எடுக்க முடியாமல் புலிகளின் கைகள் கட்டப்பட்டுள்ளன!

### தமிழ்ச்செல்வன் கூறினார் என சந்திரசேகரன் தகவல்

கொழும்பு,ஜூன்3

சமாதானம் என்ற போர்வையில் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இலங்கை அரசும் அதன் படைகளும் இறங்கியுள்ளன. ஆனால், நாம் (விடுதலைப் புலிகள்) சமாதானத்தில் அர்பணிப்போடு இருப்பதால் எதிர்நடவடிக்கைகளை எடுக்கமுடியாமல் அடங்கிப்போயிருக்கிறோம். தகுந்த பதிலடி கொடுக்க எங்களிடம் போதிய பலமும், உபாயமும், வழிமுறைகளும் இருக்கின்றன. ஆனால், சமாதானம் என்ற இணக்கத்தின் கீழ் எமது கைகள் கட்டப்பட்டுள்ளன.

-இப்படிக் கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பெ.சந்திரசேகரன் எம்.பி.சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போதே தமிழ்ச்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாட்டுப்பற்று மிக்க ஊடகவியலாளருக்கு அஞ்சலி

மூத்த தமிழ் ஊடகவியலாளரும், கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்க உபதலைவருமான நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் பூதவுடல் வன்னியிலிருந்து நேற்று குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:வசந்தன்)



தமிழீழக் காவல்துறையினரின் பாதுகாப்புடன் வன்னியிலிருந்து முகமாலைக்கு வரும் பூதவுடல்...



யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் இறுதி ஊர்வலத்தில் ...



மலர்வளையங்களுடன் போராளிகள் ...



முகமாலை ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பூதவுடல் பிரவேசித்தபோது...



பூதவுடலைத் தாங்கிய ஊர்தி...



சோகமே உருவாக...



யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மலரஞ்சலி செலுத்தியவேளை...



ஊர்வலத்தின் முன்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரும்...

# கிழக்கு வன்முறைகளைக் கட்டுப்படுத்த இராணுவம்-புலிகள் கூட்டு நடவடிக்கை

## அது குறித்து இன்றும் இருதரப்பும் கூடி ஆராய முடிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற படுகொலைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக படைத்தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் யுத்த சூனியப்பகுதியிலுள்ள வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் கெர்ரொப் ஹொக்லண்ட் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

படைத்தரப்பில் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பூரண நடவடிகைத் தளபதி (OOC) மேஜர் ஜெனரல் சாந்த கோட்டேகொட, மட்டு. மாவட்ட சிரேஷ்ட பொலஸ் அத்தியட்சகர் மகேஸ்சமரதிவாகர, விஷேட அதிரடிப்படை அத்தியட்சகர் உபுல் செனிவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டு- அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு- அம்பாறை துணைத்தளபதி ரமணன் மற்றும் ஜனார்த்தன், பவானந்தன் ஆகியோரும் பேச்சுக்களில் பங்குபற்றினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற மனிதப் படுகொலைகள் தொடர்பாக இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இப்படுகொலைகளுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அரச படையினரையே சாரும் எனப் புலிகளின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களுக்கு அரச படையினரே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும், இராணுவத்தினரும், புலிகளும் இணைந்து இச்சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக கூட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்டது.

இக்கூட்டு நடவடிக்கை தொடர்பாக இராணுவம்- புலிகள் பிரதிநிதிகள இன்று சந்தித்துப் பேசுவது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (க)

# பாடகர் செல்வக்குமாருக்கு தில்லையம்பதியில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்3

தென்னிந்தியாவின் பிரபல பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் புதல்வரும் பாடகருமான ரி.எம்.எஸ். செல்வக்குமார் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் நேற்று பொன்னாடை போர்த்து- பொற்கிழி, தங்கப் பதக்கம் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி ஆலய பரிபாலன சபையினரின் அழைப்பின் பேரில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த இவர், கடந்த சில தினங்களாக ஆலய உற்சவ நிகழ்வுகளில் கலந்து கொண்டு தேவாரப் பதிகங்களைப் பாடியிருந்தார்.

ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவான நேற்று ஆலய முன்றிலில் வைத்து இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

பொற்கிழி, தங்கப்பதக்கம் என்பனவும் இவருக்கு வழங்கப்பட்டன.

இவரது தந்தையாரான ரி.எம் சௌந்தரராஜனுக்கும் தங்கப்பதங்கம் ஒன்று இவரிடம் கையளிக்கப்பட்டது. (4)

# தீகவாபிக்கு நாளை ஜனாதிபதி விஜயம்

அம்பாறை,ஜூன்3

தீகவாபி பௌத்த விகாரையில் 50 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, பௌத்த பிக்குகளுக்கான ஆராதனை மண்டபத்தை திறந்து வைக்கும் நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நாளை தீகவாபி வருகிறார்.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீகவாபி வருகை தரும் ஜனாதிபதி, அங்கு நிறுவப்பட்டுள்ள பொஸன் தோரணங்களைத் திறந்து வைப்பதுடன் 3 ஆயிரம் பேருக்கு அன்னதானம வழங்கிக் கௌரவிப்பார்.

ஜனாதிபதியுடன், அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட பல அமைச்சர்களும், அரச உயர் அதிகாரிகளும் அம்பாறைக்கு வருகை தரவிருக்கின்றனர்.

ஜனாதிபதி மற்றும் பிரமுகர்களின வருகையை முன்னிட்டு கடந்த செவ்வாய் முதல் அம்பாறைப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. விசேட அதிரடிப்படையினர் குழுக்களாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறக்காமம் அல் - அஷ்ரப் மகா வித்தியாலயம், வரிப்பத்தான்சேனை அல்- அமீர் வித்தியாலயம் என்பவற்றில் பாதுகாப்புப் படையினர் முகாமிட்டுள்ளதால் நாளைவரை அப்பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இறக்காமம் பிரதேசம் முற்றாக பாதுகாப்புப் படையணிகளின் வசம் உள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் அம்பாறைக்கு ஜே.வி.பி. பிரமுகர் விமல் வீரவன்ஸ விஜயம் செய்திருந்தார். (க)

## அ.அட்டைக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு

தெல்லிப்பழை,ஜூன்3

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள காங்கேசன்துறை தெற்கு, கிழக்கு ,மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளையும், தையிட்டி தெற்கு, கிழ.மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்று மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் தி.அருமைநாயகம் வசம் உள்ளன. அவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் தெரிவித்துள்ளார். (ஓ-150)

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடற்கரைநீர் மாசுபாட்டால் ஏற்படும் நோயினாலும், இறப்பினாலும் உலகப் பொருண்மியத்தில் ஆண்டுதோறும் 12.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படுகிறது.

உதயன்

# தேயிலைத் தோட்ட தேனீக்களைக் குழப்பாதீர்!

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மலையகத் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள், வன்முறைகள் என்பன கட்டவிழ்த்து விடப்படும் நிகழ்வு சகஜமாகி வருகின்றது.

கந்தப் பொல, இங்கிரிய என்ற வரிசையில் இப்போது புளத் சிங்கள மில்கந்தத் தோட்டத்தில் காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியிருக்கின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவின் ஹொரணைப் பகுதியை நெருங்கிய தோட்டத்திலேயே இந்தத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

இத்தகைய வன்முறைகள் நிகழாமல் கட்டுப்படுத்த வேண்டிய அமைச்சை ரத்னசிறி விக்கிரமநாயக்கா பொறுப்பேற்று சில நாள்களில்தான், அவை நிகழ்த்தப் பட்டிருக்கின்றன; அத்தகைய கொடூரங்களைப் புரியும் துணிச்சல் சிங்களக் காடையர்களுக்குப் பிறந்திருக்கின்றது. பொதுப் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்கு, பௌத்த சாசனம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சராகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் ரத்னசிறி விக்கிரமநாயக்கா பதவியேற்றது கடந்தவாரம் புதன்கிழமை. ஐந்தாம் நாள் கழித்து - கடந்த திங்களன்று - தமிழர்களுக்கு எதிரான சிங்களக் கொடூரம் புரியப்பட்டிருக்கின்றது.

மலையகத் தமிழர்களுக்கு எதிரான இந்தத் தொடர் கலவரங்களுக்கான காரணம், பின்னணி, நோக்கம் எவையாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு யதார்த்த நிலையை நாம் அவதானிக்கவேண்டும்.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த தென்னிலங்கை சிங்கள அரசுகளில் சரியோ, பிழையோ மலையகத் தமிழர்களின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பிரமுகர்கள் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், இப்போது அப்படியல்ல. இ.தொ.காவின் எம்.பிக்களும் சரி, மலையக மக்கள் முன்னணியின் எம்.பிக்களும் சரி இதுவரை எதிரணியில்தான் இருக்கின்றார்கள்.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் அல்லாடும் இந்தச் சிறுபான்மை அரசு மலையகக் கட்சிகளின் எம்.பிக்களை எதிரணித் தரப்பிலிருந்து தன் பக்கம் குத்துக்கரணம் அடிக்கவைப்பதன் மூலம் தன்னைக் கவிழாமல் காப்பாற்றிக்கொள்ள ஆலாய்ப் பறக்கிறது. இந்த விடயத்தில் விரக்தியின் விளிம்பில் நிற்கும் அரசுத் தரப்பு மலையகக் கட்சிகளை தனது வலையில் வீழ்த்துவதற்கு எதுவும் செய்யத் தயாராக இருக்கின்றது என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான்.

"இதுவரை காலமும் அரசில் இருந்தீர்கள். அதனால், உங்களால் எல்லாம்செய்ய முடிந்தது. இப்போது எதிரணியில் இருக்கின்றீர்கள். உங்கள் மக்கள் தாக்கப் படுகின்றார்கள். நீங்கள் எதிரணியில் இருப்பதால் அதைத தடுக்கவோ உங்கள் மக்களைக் காப்பாற்றவோ உங்களால் முடியாதுள்ளது. வெறுமனே கண்டித்து அறிக்கை விடுவதைத் தவிர உங்களுக்கு வேறு என்ன வழியுண்டு? ஆகவே, அரசுப் பக்கம் சாயுங்கள். எல்லாம் செய்யலாம். உங்கள் மக்கள் தாக்கப்படாமல் காப்பாற்றலாம். அவர்களைப் பாதுகாக்கலாம்" - என்ற செய்தியை செயற்பாடுகள் மூலம் இந்த எம்.பிக்களுக்கு உணர்த்துவதன் மூலம் அவர்களைத் தமது பக்கம் வீழ்த்த அரசுத் தரப்பு திட்டமிடுகின்றதோ என்ற ஐயம் பலருக்கு.

நீங்கள் தெரிவுசெய்த எம்.பிக்கள் எதிரணியில் இருப்பதால் உங்களைக் காப்பாற்ற முடியாதவர்களாக - இயலாதவர்களாக - இருக்கின்றார்கள் - என்ற செய்தியை மலையகத் தோட்ட தொழிலாளருக்குத் தெரியப் படுத்துவதன் மூலம் அவர்களின் எம்.பிக்களை அரசுப் பக்கம் சாயவைப்பதற்கு அவர்களின் அழுத்தத்தை அந்த எம்.பிக்களுக்கு எதிராக ஏற்படுத்துவதும் ஒரு திட்டமாக இருக்கலாம்.

எது எப்படியென்றாலும் தேனீக்களைப்போல் கடுமையாக உழைக்கும் வர்க்கத்தினர், நேநீர் தயாரிக்கும் கொழுந்துகளைக் கொய்தும், றப்பரை வெட்டியும் தொழில் புரிபவர்கள் மலையக மக்கள். அவர்கள் அமைதியானவர்கள் வீண்வம்புக்குப் போகாது - தாமுண்டு தம்வேலையுண்டு என்று இருக்கின்ற - நற்பிரஜைகள். அப்படியான சமுதாயத்துக்கு எதிரான இத்தகைய வன்முறைகள் தேன் கூட்டுக்குக் கல்லெறிவது போன்றது. தேனீக்கள் குழம்பினால் - சாதுக்கள் மிரண்டால் - காடு கொள்ளாது. அதனை அரசும் மலையக மக்களுக்கு எதிராக வன்முறை புரியும் சிங்களவர்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்தத் தரப்பினைச் சேர்ந்தோரே! இதேபோக்கை வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு எதிராக நீங்கள் கட்டவிழ்த்து விட்டதால் வந்த நிலைமையின் பலனை, முழு நாடுமே இன்று அனுபவித்துக் கொண்டிருப்பதை அவ்வளவு சுலபமாக மறந்துவிட்டீர்களா?

கந்தப்பொல கலவரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடந்த விசேட விவாதத்தில் ஈழவேந்தன் எம்.பி. கூறியவை இங்கு கவனிக்கத்தக்கது:

"சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தங்களைக் காப்பதற்காக தலைவர் பிரபாகரன் தலைமையில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் காப்பரண் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். மலையகத் தமிழர்களும் தமது பாதுகாப்புக்காக அத்தகைய பாதுகாப்பு அரணை உருவாக்க வேண்டும் என சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்றார்களா? அப்படி விரும்பினால் அதையும் செய்யத் தயார்!" என்று முழங்கியிருந்தார் அவர்.

இன்றைய நிலையில் இந்தக் கேள்வி அரசுக்கும் வன்முறையை நாடும் பேரினவாதிகளுக்கும் சமர்ப்பணம்.





பத்திரிகையாளர் ஜி.நடேசனின் படுகொலையைக் கண்டித்து நேற்றுக் குடாநாட்டில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.மத்திய பஸ்நிலையப் பகுதி மற்றும் யாழ்.நகரக் கடைகள் என்பன வெறிச்சோடிக் காணப்படுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:வசந்தன்.)

# மதமாற்றத்தைத் தடுப்பதற்கு சட்டநகல் சபைக்கு வருகிறது

கொழும்பு,ஜூன்3

பௌத்த விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மூன்று புதிய சட்டமுன்வரைவுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறார். இவைகளில் ஒன்று ஒழுங்கற்ற முறையில் மதமாற்றங்கள் நடைபெறுவதைத் தடுப்பதாகும்.

பௌத்த மதத் தலைவர்களுக்கான நீதிமன்றங்கள் மற்றும பௌத்த சாசன நியமங்கள் தொடர்பான சட்டமூலம் ஆகியவையே ஏனைய இரு முன்வரைவுகளாகும்.

புத்தவிகாரைகள் மற்றும் விகாராதிகளுக்கிடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கு விசேஷ நீதிமன்றங்கள் தேவைப்படுவதாக அமைச்சர் விக்கிரமநாயக்க கூறினார்.

பௌத்த தர்மப் பாடசாலைகளுக்கு இலவசமாக நூல்களும் ஏனைய பொருள்களும் அங்குள்ள ஆசிரியர்களுக்கு இலவசமாகச் சீருடைகளும் வழங்கப்படும் என்று கூறினார் அமைச்சர்.

மதமாற்றங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், ஆசிய நாடுகளில் பல நூற்றாண்டு காலமாக பௌத்த மதத் தலைவர்கள் ஏனைய மதங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறார்கள் என்றும் மலேஷியா, இந்தோனேசியா, கொரியா போன்ற நாடுகளில் திட்டமிடப்பட்ட முறையில் அல்லது கம்யூனிஸம் காரணமாக பௌத்த மதத்தவர்கள் மாற்றப்பட்டுவிட்டார்கள் என்றும் கூறினார்.

இதேவேளை - ஜாதிக ஹெல உறுமய, தனி நபர் பிரேரணையாக மதமாற்றத்திற்கு எதிரான ஒரு தீர்மானத்தை முன்மொழிந்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் வலதுகுறைந்தவர்கள் மதமாற்றம் செய்யப்படும்போது அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதிபெறவேண்டுமென்றும் மதமாற்றம் தொடர்பான முழுவிவரமும் அப்பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஹெல உறுமய சட்டமுன்வரைவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மதமாற்றம் செய்வதற்கு முனைபவர்களுக்கு சிறைத்தண்டனையுடன் ஒரு லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கவும் அதில் வகை செய்யப்பட்டுள்ளது. (ப)

# உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூன்3

எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை அகில இலங்கை ரீதியில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அந்தந்த உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சகல பகுதிகளிலும் இந்த உள்ளூராட்சி வாரத்தினை முனனிட்டு பல்வேறு வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தின் முதல்நாள் சுகாதாரம், சுத்திகரிப்பு தினமாகவும் இரண்டாம் நாள் விளையாட்டுத் தினமாகவும், மூன்றாம் நாள் சூழல் பேணும் தினமாகவும் நான்காம்நாள் அபிவிருத்தி கருத்திட்டத் தினமாகவும் ஐந்தாம் நாள் சிரமதான தினமாகவும் ஆறாம் நாள் தகவல் தொழில்நுட்பத் தினமாகவும் ஏழாம் நாள் பரிசில்கள் வழங்கும் தினமாகவும் கொண்டாடப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை மாநகரசபைகள் நேரடியாகவும் நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவை அந்தந்த உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாகவும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-117)

# தமிழ்த்தினப் போட்டிகள் குறித்து பாடசாலைகளுக்குச் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்3

அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டிகள் தொடர்பாகத் திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் பாடசாலை மட்டத் தமிழ்த்தினப்போட்டிகள் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னரும், வலய மட்டப்போட்டிகள் ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்னரும், மாகாண மட்டப்போட்டிகள் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா தெரிவித்துள்ளார்.

இம்முறை தமிழ்த்தினப் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தும்போது போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் நடுவர்களுடைய பெயர்விவரங்களையும் போட்டி முடிவுகளோடு இணைத்து யாழ்.கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்கவேண்டுமென்றும் யாழ்.கல்விவலய தமிழ்மொழி உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4-ரி)

## நாளை

வைகாசி 22
வெள்ளிக்கிழமை
(04.06.2004)
திதி : பிரதமை
பகல் 7.50 வரை
நட்சத்திரம்: மூலம்
பின்னிரவு 3.10 வரை
சுபநேரம்: 5.52-7.22
ராகுகாலம்: 10.22-11.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

என்றும் மறவாத நட்பே உண்மையான நட்பு.

## பாடசாலை வளவில்

# அனுமதியின்றி மரம் தறிப்பு; கல்வி அமைச்சில் முறையீடு

யாழ்ப்பாணம்,ஜூன்3

கல்வியங்காட்டில் உள்ள பாடசாலை ஒன்றின் மைதானத்தில் நின்ற வாகை மரம் தறித்து விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப்பாடசாலையின் மைதானத்தில் பாடசாலை அதிபரே இந்த மரத்தை எவரது அனுமதியும் இன்றி விற்பனை செய்துள்ளார் என்று பாடசாலையின் பழையமாணவர்கள் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

மேற்படி முறைப்பாட்டின் பிரதிகள் மாகாண ஆளுநர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், மரக்கூட்டுத்தாபன அதிகாரி, யாழ்.கல்விவலயம் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விவரம் அறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாணக்கல்வி அமைச்சினால் யாழ்.கல்வி வலயத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மரம் வெட்டியது தொடர்பாகத் தனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்று குறிப்பிட்ட பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார் எனவும் - மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் யாழ்.கல்விவலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வாகை மரம் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-86-ரி)

# ஊடகத்துறை அமைச்சராக மங்கள நியமிக்கப்படலாம்

கொழும்பு,ஜூன்3

தற்போது வெற்றிடமாகவுள்ள தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சுப் பதவிக்குத் துறைமுக மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சரான மங்கள சமரவீர நியமிக்கப்படக் கூடுமென அரசியல் வட்டாரத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தற்போது அவர் வகித்துவரும் அமைச்சுப் பதவியிலிருந்து விமானப் போக்குவரத்துத்துறை நீக்கப்பட்டு அதனை மிக விரைவில் ஐ.ம.சு.கூட்டணி அரசில் இணையக்கூடுமென எதிர் பார்க்கப்படும் இ.தொ.காங்கிரஸ் கட்சிக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்படுள்ளதாகவும் தெரியவருகின்றது.

எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராகப் போட்டியிடும் பொருட்டுத் தாம் இதுவரை ஐ.ம.சு.கூட்டணி அரசில் வகித்து வந்த தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பதவியை றெஜினோல்ட்குரே இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்த அமைச்சுப் பதவியை அரசமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகரவுக்கு வழங்குவதென முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பதவியைப் பொறுப்பேற்க அவர் விரும்பவில்லையெனவும் தெரிய வந்துள்ளது. (10)

# அம்புலன்ஸ் சாரதி இல்லை; நோயாளர் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அம்புலன்ஸ் சாரதி நிரந்தரமாக இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் முன்னர் பணியாற்றிய அம்புலன்ஸ் சாரதி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் சாரதியொருவர் கடமையாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் வாரத்தில் 5நாள்களே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். சனி-ஞாயிறு தினங்களில் இவர் சமுகமளிக்காமையால் அந்த இரு தினங்களிலும் அனுமதிக்கப்படும் நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு எடுத்துவருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் நோயாளிகள் தமது பணத்திலே வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி யாழ்.வைத்தியசாலைக்கு நோயாளர்களை எடுத்துச்செல்லவும் நேரிடுகிறது.

இதனால் வறுமை நிலையில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையெடுப்பார்களா? என்ற ஆதங்கம் நோயாளர் தரப்பில் இருந்து எழுந்துள்ளது. (4-ரி)

Digital Generation

Hardware & Net Working (Mobile Services)
CD Writing & CD Sales
Type Setting
Capturing (VHS to CD)
Kids Games
Net-2-Phone

1st Cross Street, Main Street, Nelliady.
Uduvil East, Chunnakam.
T.P: 0777 238298



புலமைப்பரிசில் திட்டத்தில் பங்குபற்றாத மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

30% கட்டணச் சலுகை

SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C++
DIPLOMA IN NETWORK ENGINEERING


புதிய பிரிவு ஆரம்பம் 07,11.06.2004

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
scclanka@hotmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India.
T.P: +91-44-4891286


## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழ மண்ணில் 17 - 02 - 1971

ஈழ மண்ணிற்காக 30 - 05 - 1989



வீரவேங்கை தரன்

### குணரத்தினம் இராஜசேகரம்

இந்திய இராணுவத்தினை எதிர்த்து
வெற்றிலைக்கேணிப் பகுதியில்
போராடி வீரமரணத்தைத் தழுவிய
மறவனின் வீரத்தை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆதி கோயிலடி,
வல்வெட்டித்துறை.

நடராசா குணரத்தினம் (தந்தை)
மற்றும் குடும்பத்தினர்.

(சி-35359) (26-14-21)

## வட-கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு,ஜூன்3

வட-கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று கல்வியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆயிரம் பட்டதாரிகளுக்கு இன்னும் இருமாத காலத்தினுள் நியமனங்கள் வழங்கப்படவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதற்கமைய இவ்விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகாண் போட்டிப் பரீட்சைகள் வட-கிழக்கு மாகாணத்தின் மாவட்டப் பிரிவுகளில நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

## இரத்தினபுரியில் நீரோடையில் மூழ்கி மரணம்!

இரத்தினபுரி,ஜூன்3

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக நிரம்பியிருந்த நீரோடையொன்றில் மூழ்கி ஒருவர் மரணமானார்.

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கலவான பிட்டக்கந்துராவ என்ற இடத்தைச் சேர்ந்த சுப்பு ஹரிச்சந்திரன் (வயது21) என்ற தோட்டத் தொழிலாளியே இவ்வாறு மரணமானவராவார்.

(4-ரி)

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

வலிதெற்கு,ஜூன்3

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட உள்ள பல புதிய தொழில் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ சாதாரணதரம் வரை கல்வி கற்றுள்ள இளைஞர்கள், யுவதிகளுடைய எதிர்கால வாழ்வை வளம்படுத்தும் நோக்குடன் அகதிகள புனர்வாழ்வு நிறுவனத்தின் முயற்சித் திறன் விருத்திமையம் இவ்வாறு பல பயிற்சி நெறிகளை ஆரம்பித்து நடத்த உள்ளது.

ஆறு மாதங்கள் வரை வழங்கப்பட உள்ள இப்பயிற்சி நெறிகளுள், தமிழ், ஆங்கில மொழி மூலமான தட்டச்சு பயிற்சிகள் யாழ்ப்பாணத்திலும், இணுவிலிலும் வார இறுதி நாள்களில் நடைபெறவுள்ளன.

புத்தகம் கட்டும் பயிற்சி யாழ்ப்பாணத்திலும் சில்லாலையிலும் நடைபெற உள்ளது. வார நாள்களில் யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சி, வானொலி திருத்தல் மற்றும் உடை அமைத்தலும், வர்ணம் தீட்டலும் ஆகிய பயிற்சிகளும் வார இறுதி நாள்களில் வயறிங், றிவைன்டிங் என்பனவும் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற விரும்புபவர்கள் தமது விவரங்களை சுயமாகத் தயாரித்து. எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-152)

## சுன்னாகம் தபாலகத்துக்குக் காணி

வலிதெற்கு,ஜூன்3

சுன்னாகம் தபாலகத்துக்குக் கட்டடம் அமைக்கக் காணியொன்று தேவைப்படுவதாக சுன்னாகம் தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம்- புன்னாலைக்கட்டுவன் வீதியில் கதிரமலைச் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் நீண்டகாலமாக இத்தபாலகம் இயங்கிவருகின்றது.

தபாலகம் இயங்கிவரும் கட்டடத்துக்குரிய உரிமையாளர்கள் கட்டடத்தைத் தமது தேவைக்குப் பயன்படுத்த வேண்டி உள்ளதால் தபாலகத்தை வேறு இடத்தில் அமைத்துக கொள்ளுமாறு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து தபாலகத்திற்கான காணி தபாலக அதிகாரிகளால் பார்க்கப்பட்டு வருகின்றது.

தபாலகத்துக்குக் காணி வழங்க விரும்புபவர்கள் தபாலதிபருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-152)


இன்னும் 2 நாட்களே உள்ளன!

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
5-6-2004
ASIAN COMPUTERS
- 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் - K.K.S.வீதி,சுன்னாகம்.
- கோடிகாமம் ரோட், நெல்லியடி.



மீண்டும் யாழ் நகரில்..........
பிள்ளையார் லேணேர்ஸ்
சாரதிப் பயிற்சியளிப்பதில் யாழ் நகரின் முன்னோடிகள்
எமது மீள்வரவை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு
இலவசப்பயிற்சியுடன் லைசென்ஸ்
239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
சட்ட அங்கீகார எண்: D.S. 379


## கூலிக்கான கூறுவிலை கோரல்

எமது தலைமை அலுவலக மேல்மாடிக் கட்டடத்திற்கு லெவல் சீற் அடித்தல், தளபாடங்கள் கதவுகளுக்கு பூட்டுப் போடுதல் மற்றும் மதில் கட்டுதல், கூரை முகட்டு ஓடு கட்டுதல், கிணற்றுக்கு கம்பி வலை அடித்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு கூலிக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

அலுவலக வேலை நேரத்தில் செய்யவேண்டியுள்ள மேற்படி வேலைகளை நேரில் பார்வையிட்டு எம்மால் வழங்கப்படும் படிவத்தில் பூர்த்திசெய்து 15-06-2004ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
வடமாகாண .ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்,
இல.52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(சி-35361) (21-14)

## 31ஆம் நாள் இதய அஞ்சலி

### வல்லிபுரம் இராசையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், விக்கினேஸ்வரக் கல்லூரி - கரவெட்டி)

அன்னையிலும் மிக்க அன்பு காட்டி
பிதாவினிலும் மிக்க பரிவு கூட்டி
ஆயகலைகள் அறுபத்து நான்கையும்
அமுதென அள்ளியூட்டிய
அன்புசால் ஆசிரிய
ஏக பராபரனுக்கு அடுத்ததாக எண்ணப்படும்
ஏந்தல் ஆசிரிய
இன்ப நாதம் முழங்கும்
இயற்கையின் இனிய காட்சிகளை
பூகத்துவ ஆராய்ச்சியால் புரிந்துகொண்டு
எமக்குப் பூகோள அறிவைப் புகட்டிய புனிதனே!
நாம் கற்றுக்கொண்ட கல்வி எம்
மனதை விட்டு அகலா - அவை
எம் இதயத்தை விட்டு விலகா
அவை எம் இதயத்தில் இருக்கும் மட்டும்
தங்கள் திருச்சொரூபம்
எம் உள்ளத்தை விட்டு விலகா!

புவியியல் கற்றுத்தேறிய மாணவர்.

(32527)(35)

## 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 01 - 05 - 1933



இறப்பு 04 - 05 - 2004

கிளி/உருத்திரபுரத்தை வதிவிடமாகக் கொண்ட

### அமரர் கதிர்காமு நாகநாதன்

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
ஆசிரிய குலத்திற்கு
வழிகாட்டியாய்
மரணத் தறுவாயிலும்
கலகலப்புடன்
புன்முறுவல் பூத்த மலர்

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியரும் தற்போது கல்வி கற்பிக்கும் சந்திரமோகன ஆசிரியரின் தந்தையாருமான கதிர்காமு நாகநாதன் அமரத்துவமடைந்த 31ஆவது நினைவு நாளான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/உருத்திரபுரம் ம.வி.

(32606) (26)

# யாழ்.மாவட்ட வீரர் சிவோதயன் அகில இலங்கைச் சதுரங்கச் சம்பியன்



யாழ்ப்பாணம்,ஜுன்3

தேசிய பகிரங்க சதுரங்க சம்பியன் போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வி.ரி.எஸ் சிவோதயன் அகில இலங்கைச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இப் போட்டியில் சிவோதயன் தான் பங்குபற்றிய ஆட்டங்களில் ஒரு போட்டியில் தோல்வியையும் 6 போட்டிகளை சமனிலையிலும் முடித்ததுடன் ஏனைய போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்றார்.

இறுதியாட்டத்தில் கொழும்பைச் சேர்ந்த அனுரத்த என்பவரைத் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டார்.

இலங்கைத் தேசிய சதுரங்க அணியில் இடம்பெற்றுள்ள இவர் தென்னாசிய சதுரங்க அக்கடமியில் (Academy of South Asia) சதுரங்க விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

இந்தச் சம்பியன் பட்டத்தைப் பெற்றதன் மூலம் தமிழர் ஒருவர் இலங்கைச் சதுரங்கச் சம்பியன் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

யாழ் மாவட்ட சதுரங்கசம்மேளனத்தின் சார்பில் இப் போட்டியில் பங்குபற்றிய சிவோதயனுடன் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் நால்வர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (5)





இலங்கை ஏரணிஸ் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாட்ட பாடசாலை மாணவர்களுக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இலங்கை ரெனிஸ் சங்கத்தின் வெளிமாவட்ட அபிவிருத்திப் பயிற்றுநர் கிறிஸ்தோப்பர் பாரதிராசா பயிற்சி வழங்குவதையும் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (5-190)

# விளையாட்டு

## 19 வயதுக்கு உட்பட்டோருக்கான

# 'எவரெடி' கிண்ண உதைபந்தாட்டம் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.அணி

யாழ்ப்பாணம்,ஜுன்3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் 19 வயதிற்குட்பட்டோருக்கான எவரெடி வெறறிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொட்டாஞ்சேனை சென். பெனடிற் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு யாழ்.அணி தகுதி பெற்றுள்ளது. இந்த அணியில் இடம் பெறும் வீரர்கள் நாளை கொழும்பு செல்லவுள்ளனர்.

இப்போட்டியின் ஆரம்பகட்டத்தில் யாழ்மாவட்ட அணி மன்னார் அணியை 3-2 என்ற கோல்கணக்கிலும், கிளிநொச்சி அணியை 3-1 என்ற அடிப்படையிலும், பதுளை அணியை 4-3 என்ற கணக்கிலும், கண்டி அணியை 4-1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டு அரையிறுதிக்கு தகுதி பெற்றது. இதேவேளை, களுத்துறை, வவுனியா ஆகிய அணிகளுடனான ஆட்டங்களில் யாழ்.அணி தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நாளை கொழும்பு செலலும் உதைபந்தாட்ட அணியின் விவரம் வருமாறு.

சிறில்பூட் வினிஸ்ரன் (அணித் தலைவர்), அருளானந்தம் மயூரன், கிறிஸ்தோப்பர் விக்ரர், வாமதேவன் கபில்தேவ், தங்கராசா ரகுலன், கிறிஸ்தோபபர் றொசாந்தன், இராஜசேகரன் சுஜீசன், இம்மானுவேல் நெனவெனிஸ்ரன்.

அல்பிரட் கனிஸ்ரன், செல்வராசா பத்மராஜ், லிகோரி கமிலஸ், தோமஸ் கிறிஸ்ரி அன்ரூ, அன்ரன் லக்ஸ்மன், பாலன் மயூரன், அருமைத்துரை சிறீனிவாஸ், பெர்ணான்டோ அரவிந்ததாஸ், கீதகொன்கலன் அன்ரனி சுதர்சன், சார்லஸ் எமிலியின் திவாகரன். (5-190)

## 17 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கனடா அணியின் வீரர்

ரொறன்ரோ,ஜுன்3

ஐ.சி.சி இன்டர்கன்டினஸ் கிண்ண 3 நாள்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் போட்டித்தொடரின் போட்டியொன்றில் கனடா அணியின் வீரர் ஜோன் டேவிசன் 17 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிச் சாதனைபடைத்துள்ளார்.

கனடா - அமெரிக்கா ஆகிய அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியொன்றில் முதல் இனிங்ஸில் 61 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இனிங்ஸில் 76 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி அவர் இந்தச்சாதனையைப் படைத்துள்ளார்.

இதன் மூலம் கனடா அணி அமெரிக்க அணியை 104 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

துடுப்பாட்டத்திலும் இவர் முதல் இனிங்ஸில் 7 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

## இரு சதங்களைப் பெற்றுக்கொண்ட பங்களாதேஷ் அணி

சென்ந்லூசியா,ஜுன்3

மேற்கிந்திய , பங்களாதேஷ அணிகளுக்கிடையே நடைபெற்று முடிந்த முதலாவது டெஸ்ட்போட்டியில் பங்களாதேஷ் அணியின் இரு வீரர்கள் சதங்களைப் பெற்றுள்ளனர்.

அந்த அணியின் முகமட் ரபீக் 111 ஓட்டங்களையும் ஹபிபுல்பஷார் 113 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

அண்மைக்காலமாக பங்களாதேஷ் அணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் திறமைகாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (10)

# சென்.மேரிஸ் அணி வெற்றி

டயானா விளையாட்டுக் கழகம் யாழ்மாவட்ட ரீதியாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டக் கழகம் சம்பினாகியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாடடம் கடந்த 30 ஆம் திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதி ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனி விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென்.மேரிஸ விளையாட்டுக்கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமானது முதல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணியினர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டனர்.

இதனால் ஆட்டம் 1-0 என்ற கோல் கணக்கில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் அணியினர் ஒரு கோலை அடித்து கோலின் எண்ணிக்கையை சமப்படுத்தினர். இதன பின் ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. இருந்போதும் சென்.மேரிஸ் அணியினா ஆட்டம்நிறைவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் நிலையில அடுத்தடுத்து 2கோல்களை அடித்து தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். மேரிஸ விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது. (5-190)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இல்லத் தலைவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*

# எல்லை கடந்த பத்திரிகையாளர் நடேசன் கொலைக்குக் கண்டனம்

ஊடகவியலவாளர் ஐயாத்துரை நடேசன் கொலை செய்யப்பட்டுள்ளதை எல்லைகடந்த பத்திரிகையாளர் அமைப்பு கண்டித்துள்ளது.

தமிழ் இயக்கங்களுக்கிடையிலான பிணக்குகளும், பாதுகாப்புப் படைகளுடனான முறுகல்நிலைகளும் செய்தி ஊடகங்களுக்குகெதிரான வன்செயல்களை அதிகரித்து விடும் அபாயம் தோன்றியுள்ளது என அவ்வமைப்பு கூறியுள்ளது.

அவ்வமைப்பு விடுத்துள்ள பத்திரிகைக்குறிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை இராணுவத்தைப்பற்றியும், சில ஆயுதக்குழுக்களைப் பற்றியும் வீரகேசரி பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் ஜி.நடேசன் விமர்சனக்கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். விடுதலைப் புலிகளின் அமைப்பில் ஏற்பட்ட சில முரண்பாடுகளையடுத்து உருவான வன்முறைகளின் மத்தியில் ஜி.நடேசனின் கொலை இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற ஒரு ஆயுதக்குழுவினர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டிருந்தது. நடேசன புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் என்றும் கருதப்பட்டது. உள்நாட்டில் பிரபல்யமான பத்திரிகையாளராக அவர் விளங்கினார். 2000 ஆம் ஆண்டின் சிறந்த தமிழ் பத்திரிகையாளருக்கான பரிசை அவர் பெற்றிருந்தார்.

பாதுகாப்புப் படைகளையும் அரசையும் விமர்சித்தார் என்ப தற்காக 2001 ஆம் ஆண்டு சில நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதுடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் போவதாக இராணுவ அதிகாரிகளில் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டிருந்தார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையின் செய்தியாளராகவுமிருந்த மயில்வாகனம் நிமலராஜன் என்பவர் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபரில் கொலை செய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அழுத்தங்கள் இருந்தபோதிலும் கொலைகாரர்கள் இன்னமும்தான் தண்டிக்கப்படாமலே இருந்துவருகிறார்கள்.

இவ்வாறு அந்த அமைப்பு கூறியுள்ளது. (ப)

# கைப்பற்றப்பட்ட லொறி நீதிமன்றில்

அணமையில் கனகம்புளியடிச் சந்தியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந் ததாகக் கூறப்பட்ட லொறி சாவகச்சேரி பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் கையளிக்கப்பட்டுள்ளது.

கனகம்புளியடிச சந்தியில் கடமையில்நின்ற பொலீஸா லொறியை மறித்தபோது நிறுத்தாமல் சென்றதனால் அதனைத் துரத்திச் சென்று பிடித்தனர் என்றும் - எனினும அதிலிருந்து சாரதி தப்பிஓடிவிட்டார் என்றும கூறப்பட்டது. இந்த லொறியை இழுததுச்சென்ற பொலீஸா கடந்த சில நாள்களாக பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தனர். இதுவரை எவரும் உரிமைகோராத காரணத்தால் லொறியினை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளதாகப் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (4.117)

# கமநலத் திணைக்களத்தின் அலுவலகம் காரைநகரில்

## அடுத்தமாதம் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜுன்3

காரைநகர் வலந்தரைப் பகுதியில புதிதாக அமைக்கப்பட்டுள்ள கமநல சேவைத் திணைக்களக் கிளை அலுவலகம் அடுத்த மாத முற்பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளதாக யாழ். கமநலசேவைத் திணைக்கழத்தின் உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாய அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியினால் 45 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தின் இறுதி வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்த நிலையில் உள்ளதாகவும் கமநலச் சேவைத திணைக்களத்தினை இயக்குவதற்கு குழுவொன்று தெரிவுசெய்யும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-ரி)

## ரயில் தடம்புரண்டது

கொழும்பு,ஜுன்3

கடுகமுவ, இகெல கோட்டை என்பவற்றுக்கிடையில் 'உடரட்ட மினிகே' ரயில் தடம்புரண்டதனால் மலையகத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ரயில்வே கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்திருக்கிறது. ஆதலால், இந்தப் பாதையில் தற்காலிகமாக ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொலீஸ் சேவையில் புதிதாக 8ஆயிரம் பேரைச் சேர்க்க முடிவு

கொழும்பு,ஜுன்3

நாட்டில் புதிதாக நூறு பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுவதுடன் புதிதாக 8ஆயிரம் பேரை பொலீஸ் சேவையில் இணைத்துக்கொள்ளவும நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

பொலீஸ் துறையை புனரமைப்பது தொடர்பாக 2001 ஆம் ஆண்டில ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் தற்போது நாட்டில் இயங்கும் 400 பொலீஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் 100 பொலீஸ் நிலையங்கள் நிறுவப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சனத்தொகைப் பெருக்கம காரணமாக நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு பொலீஸார் தீவிரமாகச் செயற்படவேண்டியுள்ளனர் எனவும் அதற்கமைய பொலீஸ் சேவையில மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக மேலும் 8ஆயிரம் வரையானவர்களைப் பொலீஸ்துறையில் புதிதாகச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அடுத்த ஒன்றரை மாதத்துக்குள் இப்பணியைப் பூர்த்திசெய்ய முடியுமென தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# சாயி சிந்தனை

## கருணையே செல்வம்



தெய்வீகக் கருணைதான் உண்மையான செல்வம். அதைச் சேகரித்துக் கொள்ளுங்கள். மற்ற எல்லாவற்றையும் அடைந்தவர்களாவீர்கள். ஒழுக்கம், சீலம் இவை மிக முக்கியம். பணம் முக்கியமல்ல. ஆனால், மனிதன் செல்வத்தின் பின் சென்று நேரத்தை வீணடிக்கிறான். பணம் தேவைதான். ஆனால், அது சில குறிப்பிட்ட அளவுக்குள் இருக்கவேண்டும். மற்றவருக்குச் சேவை செய்வதில் உங்கள் நேரத்தைச் செலவழியுங்கள். உங்களது உற்ற நண்பர்களை, உங்களைச் சூழ்ந்திருக்கும் மனிதர்களை முதலில் நேசிக்கத் தொடங்குங்கள். இறைவனிடம் சரணடையுங்கள். தெய்வீக அன்பை மிஞ்சியது எதுவுமில்லை. இவ்வுலகம் முழுவதும் அன்பினாலேயே சூழப்பட்டுள்ளது. வேதங்கள் உரைக்கின்றன.

இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அனைத்துப் பெயர்களும் வடிவங்களும் அவருடையதே. பெயர்களும் வடிவங்களும் வேறுபடலாம். ஆனால், ஆத்மா என்பது அனைவருக்கும் ஒன்றே. அனைத்து ஜீவராசிகளிடமும் இருக்கும் இந்த ஒற்றுமையை உணர்ந்து கொள்ளுங்கள். அது பிரபஞ்ச அன்பினை உண்டாக்கும். இந்த உலகம் ஒரு பெரிய மாளிகை. அனைத்தும் மனித குலத்திற்குச் சொந்தமானது. இந்த மாளிகையில் ஒற்றுமை நிறைய வேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## நூல் வெளியீட்டு விழா

கொழும்பு,ஜூன்3

பருத்தியூர் பால.வயிரவநாதனின் "வாழவியல் வசந்தங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லைநடராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா மேல்நீதி மன்ற நீதியரசர் தி.ஜே.விஸ்வநாதன் மற்றும் சட்டத்தரணி திருமதி ரஞ்சினி விஸ்வநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ள வுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கமத் தொழில்சார்ந்த விற்பனை அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் கல்வி மற்றும் வாழ்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளர் கே.மகானந்தன், புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே.சண்முகலிங்கம், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் கே.பரமேஸ்வரன் மற்றும் டாக்டர் எஸ்.குணரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-ரி)

## தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்போதனா வைத்தியசாலையின் மின்சார விநியோகப்பிரிவில் சேவை புரிந்துவந்த இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் முதல் தமது சேவையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

இப்பிரிவில் பணியாற்றுவதற்கென, வைத்தியசாலை நிர்வாகம் இலங்கை மின்சார சபைக்கு வருடா வருடம் செலுத்தும் நிதியை செலுத்தத்தவறியமையினாலேயே இவ்வூழியர்களின் சேவையை மின்சாரசபை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

வைத்தியசாலை நிர்வாகத்தால் மின்சாரசபைக்குச் செலுத்தப்பட்ட பணத்திற்குரிய சேவை முடிவுற்றதாகத் தெரிவிககப்படுகிறது. (10-15)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-ரி)

## உலக சுற்றாடல் தின நிகழ்வு

யாழ்ப்பாணம் ஜூன்3

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகராட்சி மன்றம் நடத்தும் சுற்றாடல் தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் மாநகராட்சி மன்றத்தின் உத்தியோகத்தர்களின் சுற்றாடல் தொடர்பான கருத்துரைகளும் முன்னாள் மேலதிக அரச அதிபர் திலகநாயகம் போல் பத்தினியம்மாவின் விசேட கருத்துரையும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாநகர சபையினால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பாவோதல் போட்டியில வெற்றிபெற்றவர்களுக்கு நினைவுக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (4-ரி)

## வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜூன்3

அனலைதீவு மேற்குப் பக்க கடற்கரை வீதியைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் அதனூடாகப் பஸ்சேவை நடைபெறுவதற்கு ஆவனசெய்ய வேண்டுமென அனலைதீவு அருணோதையா சனசமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊர்காவற்றுறை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (10-16)


**படிவம்**

க.பொ.த. (சா.த.) டிசெம்பர் 2004 பரீட்சைக்குத் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிப்பதற்கான படிவமும் அறிவுறுத்தல்களும் கிடைக்கும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 30-06-2004

BHARATHY PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.

(சி-35362) (21-14)

NEXT EX GENERATION

Diploma in Computerised Accounting

TATA நிறுவனத்தின் நேரடி அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையம்

காலம் : 3 மாதம்

தமிழ் விளக்கங்களுடன் கணனி மூல கணக்கியல் மென்பொருள் பயிற்சி

இலவச பாடநூல்கள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு

ASIAN COMPUTERS

இல 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160

யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சுத் திரைப்பட விழா
French Film Festival in Jaffna

af

யூன் June 04, 05, 06 பி.ப 3.00 p.m & பி.ப 05.30p.m

| | 3.p.m | 5.30p.m |
|---|---|---|
| 04 Friday | The horseman on the roof (Jean-Paul Rappeneau-1995) | The Fabulous destiny of Amelie Poulain (Jean-Pierre Jeunet-2001) |
| 05 Saturday | One swallow brought spring (Christian Carion-2001) | -Taxi 3 (Gerard Krawczyk-2003) |
| 06 Sunday | Venus Beauty (Tonnie Marshall-1999) | The room of the officers (Francois Dupeyron-2002) |

பிரெஞ்சு நட்புறவுக் கழக கேட்போர் கூடம்
Allance Francaise Auditoriom

83, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
83, Palaly Road, Kandarmadam, Jaffna.

அனுமதி இலவசம்

COMPUTER EXPRESS
Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (3) 2004

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்.

80% OFF

| பாடநெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம் (20%) |
|---|---|---|---|
| * Diploma in Computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| * Advance Diploma in Computer Science | - 6 மாதம் | 10,000 | 2,000 |
| * Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Diploma in Graphics Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Diploma in Desk Top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| * Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| * Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

Individual Courses
+ Fox Pro, Pascal
+ C Language/C++
+ Java
+ Internet & E.Mail
+ Microsoft Visual Basic 6.0
+ Adobe PageMaker 6.5
+ Microsoft Office 2000
+ CorelDraw 10

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புகள் நடத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

For Kids
✪ Kids Program ✪ Advanced Kids Program

ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology.

வகுப்புகள் ஆரம்பம்:
Batch - 01- 05.06.2004
Batch - 02 - 13.06.2004
Batch - 03 - 20.06.2004

Maniam's Building
இல. 152/1, சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanley Rd.)
0777 222422 / 0777 278880

(C-35412)(26-14-21)

மெகா கொம்ப்யூட்டர் கற்கை நெறிகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை 5-6-2004

Diploma in Computer Software Engineering 1 DCSE
Professional Diploma in Graphic Design 2 PDGD
Diploma in Web Multimedia 3 DWM
Advanced Diploma in Visual Programming 4 ADVP
Diploma in Office Automation 5 DOA
Advanced Diploma in Digital Design 6 ADDD

யாழ் குடா நாட்டில் முதன்முறையாக ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் நடாத்தும் இப்புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி 2004 - 2005 கல்வி ஆண்டிற்கான சமகால தொழில்சார் கணனி கற்கை நெறிகளில் ஒன்றை தெரிவு செய்து முறையே 40%, 50%, 60% மற்றும் 75% வரையிலான சிறப்புப் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகள் அனைத்தும் இங்கிலாந்து ICM, ACP, IMIS மற்றும் CSC, TATA இந்திய உயர்கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை.

இத்திட்டத்தில் யார் பங்குபற்றலாம் ?

மொழி, வயதெல்லை, முன் அனுபவம் தராதரம் என்ற பாகுபாடின்றி கொம்ப்யூட்டர் கல்வியில் ஆர்வமுடைய அனைவருக்கும் மற்றும் குறிப்பாக இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் ஓர் சந்தர்ப்பம் அளிப்பதுடன் சிறப்புக் கட்டணக் கழிவையும் வழங்குவதே இப்புலமைப்பரிசில் திட்டத்தின் உயரிய நோக்கமாகும்.

இலவச பரீட்சைகள்

5-6-2004 சனிக்கிழமை நடைபெறும் இப்புலமைப்பரிசில் பரீட்சை பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக தமிழ் மொழியில் நடைபெறும்.

இலவச அனுமதி

இப்புலமைப்பரிசில் பரீட்சை முற்றிலும் இலவசம். யாழ்நகர், சுண்ணாகம் மற்றும் நெல்லியடியில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் இலவச அனுமதி அட்டைகளையும், பரீட்சை பற்றிய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம்: 2 G,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம். Tel:021-222 5677


சுண்ணாகம்: பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் K. K. S. வீதி, சுண்ணாகம்.

நெல்லியடி: கொடிகாமம் ரோட், நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்திற்கு முன்பாக)

# ஜெயலலிதாவின் படுதோல்விக்கு காரணம் என்ன?

3 நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இநத வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல்களைப் பொறுத்த வரை தமிழகத்தில் வித்தியாசமான தன்மை நிலவியது. தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் 7கட்சிகள். கிராம மட்டத்தில் அக்கட்சிகள் ஓரளவு ஆதரவைக் கொண்டிருந்தன. கருணாநிதி தனது பலத்தை மட்டுமே


சரத்குமார்

நம்பவில்லை: கூட்டணியிலுள்ள கட்சிகளுக்கு மககளிடையே இருந்த ஆதரவை ஒன்று திரட்டுவதில் தீவிரமாகச் செயற்பட்டார். ஆனால், அதேநேரம் ஜெயலலிதா தனது கட்சியின் பலம குறித்தோ அல்லது கூட்டணிக் கட்சியான பா.ஜ. கட்சியின் பலம் குறித்தோ அக்கறை கொள்ளவில்லை. ஒருபுறத்தில் தி.மு.க.கூட்டணி ஒன்றிணைந்து கடுமையாகச் செயற்பட்டது. மறுபுறத்தில் ஜெயலலிதா அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தார்.

மத்தியில் பா.ஜ.கட்சியோ அல்லது காங்கிரஸோ ஆட்சிக்கு வர வாய்ப்பில்லை எனவும் மூன்றாவது அணியே ஆட்சியைக் கைப்பற்றும் எனவும் ஜெயலலிதா நினைத்திருந்தார். இதனால், அவர் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கட்சி ஆகியன குறித்து அலட்சியப்போக்கைக் கடைப்பிடித்தார். ஆனால், வடமாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைகளுக்கான தேர்தல்களில் பா.ஜ.கட்சி பெற்ற வெற்றிகள் ஜெயலலிதாவிற்கு அதிர்ச்சியை அளித்தன. அதேநேரம், இந்தியா எங்கும் தனித்தே போட்டியிடுவது என்ற எண்ணத்தை காங்கிரஸ் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஒருபோதும் மீண்டும் இடம்பெறாது என்றிருந்த தி.மு.க. - காங்கிரஸ் உறவு மீண்டும் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதாவோடு கூட்டணி அமைத்த கட்சிகளுக்கு ஏற்பட்ட அவமரியாதைகள் அக்கட்சிகளை தி.மு.க. அணியில் இணைய வைத்தன. தான்போட்ட கணக்குகள் அத்தனையும் தவறானவை என்ற நிலையில் மாற்றுவழி ஏதுமின்றி பா.ஜ.கட்சியுடன் ஜெயலலிதா கூட்டணி அமைத்தார். 40தொகுதிகளில் போட்டியிட்டு கணிசமான வெற்றிகளைப் பெறமுடியுமென நினைத்திருந்த ஜெயலலிதா, கூட்டணிக் கட்சியான பா.ஜ.கட்சிக்கு தொகுதிகளை ஒதுக்குவதில் நேர்மையாக நடந்துகொள்ள்வில்லை எனக்கூறப்பட்டது. தேசியககட்சியான பா.ஜ. கட்சிக்கு 40 தொகுதிகளில் 7தொகுதிகளை மட்டும் ஒதுக்கியது மாத்திரமன்றி, பா.ஜ. கடசி சார்பில் யார் போட்டியிடலாம்? யார் போட்டியிடக்கூடாது என்பது போன்ற உள்கட்சி விவகாரத்திலும் தலையிட்டார்.

தனக்கு எதிரான கூட்டணியிலுள்ள பலகட்சித் தலைவர்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முனைந்தபோது - உருவாகும் சூழ்நிலைக்கேற்ப வியூகங்களை அமைத்துச் செயற்படும்போது - அ.தி.மு.க. - பா.ஜ. கூட்டணியினர் சந்திப்பதுமில்லை, கலந்துரையாடுவதுமில்லை எங்கே பேசுவது? எங்கே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுவது? யாருடன் ஆலோசிப்பது? அகில இந்தியக்கட்சியான பா.ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர்கள் அந்தஸ்தில் குறைந்தவர்கள் என்ற முடிவுக்கு வந்த பின்னர் கூட்டணி என்பது வெறும் பம்மாத்தே.


ரஜனிகாந்தின் ரசிகர்கள் பா.ம.கட்சியுடனும் அதன் தலைவர் ராமதாஸுடனும் முரண்பட்டதால் அவர்கள் அக்கட்சிக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். ரஜனியும் இதைப் பெரிய சர்ச்சையாக்கினார். இந்தியாவிலுள்ள நதிகளை இணைக்கும் திட்டத்தை பா.ஜ.கட்சி கொண்டுள்ளதால் தனது வாக்கு பா.ஜ.கட்சிக்கே என பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். ரஜனிக்கு பலநூறு ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் ரஜனிக்கு மக்களிடையே ஓரளவு ஆதரவுண்டு என்ற மாயையும் நிலவியது. இது அ.தி.மு.க - பா.ஜ.கூட்டணிக்கு ஒரு சாதகமான நிலையாக இருந்தது. ஆனால், இநதநிலையை ஜெயலலிதா தனது கூட்டணிக்குச் சாதகமாகப்பயன்படுத்த விரும்பவில்லை. அதுமாத்திரமன்றி, அலட்சியப்படுத்தினார். ரஜனியின் இந்த ஆதரவைப்பயன்படுத்த முயன்ற அ.தி.மு.கட்சியியைச் சேர்ந்தவர்கள் ஜெயலலிதாவினால் தண்டிக்கப்பட்டனர். எதிர்பாராமல் கிடைத்த ஆதரவை, அதுவும் தேர்தல் நேரத்தில் இப்படிக் கொட்டிக் குதறிய ஓர் அரசியல் தலைவரை (தலைவியை) உலகில் எங்கும் காணமுடியாது.

கருணாநிதி தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகளுக்கு திருப்தி ஏற்படும் விதத்தில் முடிந்தளவு தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அந்தந்தக் கட்சிகளுக்கு வெற்றிவாய்ப்புள்ள தொகுதிகளே ஒதுக்கப்பட்டன. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் அந்தந்தக் கட்சிகளிடமே விடப்பட்டன. இந்தச் சீரான அணுகுமுறையினால் கூட்டணிக் கட்சிகளிடம் ஒற்றுமை நிலவியது.

தி.மு.கழகம், வடசென்னை, மத்திய சென்னை, தென்சென்னை, தஞ்சாவூர், திருப்பெருந்தூர், திருச்செங்கோடு, ராமநாதபுரம், கரூர், நாகபட்டினம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, திருச்செந்தூர், திருப்பத்தூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய 15 தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சி பெரியகுளம், சிவகங்கை, பழனி, ராசிபுரம், திண்டுக்கல், சேலம், மயிலாடுதுறை, திருநெல்வேலி, நீலகிரி, கோபி ஆகிய 10 தொகுதிகளிலும் பாட்டாளி மக்கள் கட்சி பாண்டிச்சேரி, சிதம்பரம், செங்கல்பட்டு, தர்மபுரி, அரக்கோணம் மற்றும் திண்டிவனம் ஆகிய 6தொகுதிகளிலும் ம.தி.மு.க திருச்சி, வந்தவா, சிவகாசி, மறறும் பொள்ளாச்சி ஆகிய 4 தொகுதிகளிலும் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி, தென்காசி மற்றும் கோவை ஆகிய 2தொகுதிகளிலும் மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி நாகர்கோயில் மற்றும் மதுரை ஆகிய 2தொகுதிகளிலும் இந்திய முஸ்லிம்லீக் வேலூர் தொகுதியிலும் (உதய சூரியன் சின்னத்தில்) போட்டியிட்டன. இந்தக் கூட்டணி சார்பில் வெற்றிவாய்ப்புள்ள மிகப் பொருத்தமான வேட்பாளர்களே நிறுத்தப்பட்டனர்.


எஸ்.எஸ்.சந்திரன்

அதேநேரம், அ.தி.மு.கவில் வேட்பாளர்களின் வெற்றிவாய்ப்புக்கள் பற்றிச் சரியாக சந்திக்கப்படவில்லை. ஜெயலலிதாவுக்கு வேண்டியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. தென்சென்னையில் அ.தி.மு.க சார்பில் போட்டியிட்டவர் திருமதி பதர் சயித். இவருக்குள்ள ஒரேயொரு தகுதி ஜெயலலிதாவின் பள்ளிச் சிநேகிதி என்பதாகும். பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்ட டி.டி.வி.தினகரன் ஜெயலலிதாவின் உடன்பிறவாச் சகோதரி, சசிகலாவின் உறவினர். லலிதா குமார மாய் கலத்திற்காக அத்வானியே நேரடியாகப் பேசியதால் பாண்டிச்சேரித் தொகுதி பா.ஜ.கட்சிக்கு வழங்கப்பட்டது.


நெப்போலியன்

இருஅணிகளும் வேட்பாளர்கள் அறிமுகம் என்ற நிகழ்வுகளை வெகுவிமர்சையாக நடத்தின. பிரசார வியூகங்கள் வகுக்கப்பட்டன. இந்தியாவில் தென்கோடியிலிருந்து வடகோடி வரையான அத்வானியின் ரத யாத்திரை புறப்பட்டது. இந்த ரத யாத்திரையின் முதற்கட்டம் தமிழகத்தையே ஊடறுத்துச் செல்வதாக அமைந்தபோதிலும், மக்கள் அந்த ரத யாத்திரையைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இதை அரசியல்வாதிகளால் காலத்திற்குக் காலம மேற்கொள்ளப்படும் பிரசார உத்திகளில் ஒன்றாகவே மக்கள் கருதினர். சந்திரசேகர் பிரதமராக இருந்த காலத்தில் அவரும் கன்னியாகுமரியில் இருந்து ரத யாத்திரை ஒன்றை மேற்கொண்டார்.


ராதிகாசெல்வி

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்ததும் அரசியல்வாதிகள் அல்லாத மற்றவர்களும் அணிபிரியத் தொடங்கினர்.தமிழகத்தில் நிலவும் சினிமா மாயை இந்தத் தருணத்தில் களமிறங்கியது. சினிமா நடிகர்கள், நடிகைகள் அணிபிரியத் தொடங்கினர். நடிகர் சரத்குமார் மற்றும் நெப்போலியன் ஆகியோர் கருணாநிதி தலைமையிலான அணிக்காக அரும்பாடுபட்டனர். அந்த அணி வெல்லவேண்டும் என்பதற்காக அனைத்துத் தொகுதிகளிலும் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

நடிகைகளான செளந்தர்யா, ரோஜா ஆகியோர் பா.ஜ.கட்சிக்கும் நடிகர்களான ராதாரவி மற்றும் எஸ்.எஸ்.சந்திரன் ஆகியோர் அ.தி.மு.கட்சி சார்பிலும் பிரசாரங்களை மேற்கொண்டனர். இம்முறை தமிழ்நாட்டில் அ.தி.மு.கவுக்கு எதிரான உணர்வலை வீசியது. அதேநேரம், கருணாநிதி தலைமையிலான கூட்டணிக்கு கிராமமட்டத்தில் நல்ல ஆதரவு இருந்தது. சரதகுமார் மற்றும் நெப்போலியன் ஆகிய நடிகர்கள் பங்குபற்றிய பிரசாரக் கூட்டங்களில் மக்கள் அலையலையாகத் திரண்டனர். அவர்கள் தங்கள அணி, அணியின் தலைவர்கள் மற்றும போட்டியிடும் வேட்பாளர் ஆகியோரை ஆதரித்து மட்டும் பேசினர்.

ஆனால், அ.தி.மு.க. அணியிலுள்ள நடிகர், நடிகைகளின் பிரசாரங்கள் அவ்வாறு அமையவில்லை. எதிரணியை, குறிப்பாக கருணாநிதியைத் திட்டித்தீர்க்கும் வகையில் அவர்களின் பேச்சுக்கள் அமைந்தன. பல இடங்களில் அசம்பாவிதங்கள் உருவாகக் காரணமாக அமைந்தன.

உதாரணமாக சேலத்தில் கன்னங்குறிச்சி என்ற இடத்தில் அ.தி.மு.க.வேட்பாளர் ராஜசேகரனை ஆதரித்து ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் எஸ்.எஸ்.சந்திரன் பேசுவதாக இருந்தது. வழக்கம்போலவே கலைஞர் கருணாநிதியைப் பற்றி எஸ்.எஸ்.சந்திரன் கடுமையாக விமர்சிக்கவே தி.மு.கழகத்தினர் ஆத்திரமடைந்தனர். தலைவரை 'டேய்' என ஆரம்பித்து கீழ்த்தரமாகத் தாக்கத்தொடங்கவே ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் என தி.மு.கவினர் கேட்டனர். 'தி.மு.க.நாய்களை வெட்டிக் கொல்லுங்கடா' என எஸ்.எஸ்.சந்திரன் ஒலிபெருக்கியில் முழங்கியது தான் தாமதம். தி.மு.க.காரர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். அத்துடன், நிறுத்தாமல் தி.மு.க. பணிமனைக்குள் எஸ்.எஸ்.சந்திரன் தனது காரைச் செலுத்தினார். அவரது கார் தி.மு.கவினரின் வாகனங்களால் சுற்றி வளைக்கப்பட்டது. நிலைமைமோசமாகவே எஸ்.எஸ்.சந்திரனும் அவரது ஆள்களும் ஓட்டோக்களில் ஏறித்தப்பிவிட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக அ.தி.மு.க வேட்பாளர் ராஜசேகரன் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில். "எஸ்.எஸ்.சந்திரனை ஹோட்டலில் சந்தித்தேன். வழக்கம்போல கலைஞரைத் திட்டித்தீர்க்கப் போகிறேன்" என்றார். அதெல்லாம் வேண்டாம் அம்மாவைப் பற்றி (ஜெயலலிதா) மட்டும்பேசுங்கள் என்றேன். சொன்னதைக் கேட்காமல் இப்படி வம்பை விலைக்கு வாங்கிவிட்டார். நாங்கள் வாக்குகளைச் சேகரிக்கப் படாதபாடுபடுகிறோம். ஆனால், அவர் எலலாவற்றையும் கெடுத்துவிட்டாரே எனத் தெரிவித்தார்.

அ.தி.மு.க.தரப்பில் ஒட்டுமொத்த தேர்தல் பணிகளைக் கவனிக்க மத்திய கட்டுப்பாட்டறை ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு உடன்பிறவாச் சகோதரி சசிகலாவே பொறுப்பாக இருந்தார்.

புலனாய்வுத் தகவல்கள் உட்பட மாநிலத்தில் இருந்துவரும் அனைத்துத் தகவல்களும் அவரிடமே கிடைத்தன. அதேபோலவே அங்கிருந்து கட்டளைகளும் பறந்தன. அந்தக் கட்டளைகளைப் பெறுபவர்கள், எந்தத் தரத்தில் இருந்தாலும் அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டச் செயலாளர்கள் (கலெக்டர்கள்), பொலீஸ் ஆணையாளர்கள் கூட இதில விதிவிலக்கல்ல. சிலவேளைகளில் அவை வாய்மொழிக் கட்டளைகளாகவும் அமையும். உதாரணமாக, விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் குறித்த திகதிக்குள் மின்சாரக் கட்டணத்தைக் செலுத்தவேண்டும். தவறின் உடனடியாக மின்னிணைப்புத் துண்டிக்கப்படும் என கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதத்திற்கான மின்கட்டணத்தைப் பல விவசாயிகளால் செலுத்தமுடியவில்லை. இருப்பினும் மின்னிணைப்பைத் துண்டிக்கவேண்டாம் என மாவட்டச் செயலாளர்களுக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மத்திய கட்டுப்பாட்டறைக்குக் கிடைக்கும் முக்கியதகவல்கள் மேலிடத்திற்கு (ஜெயலலிதாவுக்கு) அனுப்பப்படும். அதேபோல, மேலிடத்து உத்தரவுகள் மத்திய கட்டுப்பாட்டறை ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்படும். இந்த மத்திய கட்டுப்பாட்டறை அ.தி.மு.க. மாவட்ட அமைப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோரை ஆட்டிப்படைத்தது. தங்களைப்பற்றிய தகவல் ஏதும் மத்திய கட்டுப்பாட்டறைக்குச் சென்றுவிடக்கூடும் என இவர்கள் அஞ்சி நடுங்கினர். கட்சிக்காய் பாடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அடிமைகளைப்போல நடத்தப்பட்டனர். (வளரும்)

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் உற்சவகால தற்காலிகக் கடைகளுக்கான காணித்துண்டுகளின் பகிரங்க ஏலம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மஹோற்சவம் எதிர்வரும் 18.06.2004 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.07.2004 தெப்போற்சவத்துடன் நிறைவடைகின்றது. இக்காலப் பகுதியில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கான காணித் துண்டுகள் 12.06.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய வீதியில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். கேள்வித்தொகையின் ¼ பங்கினை உடனடியாகச் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சுகாதார நடைமுறைகள், நாட்டின் சட்டதிட்டங்களுக்கேற்பக் கடைகளை நடத்த வேண்டும். இதற்கான முழுப்பொறுப்பினையும் கடை உரிமையாளரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில்,
நயினாதீவு.
02.06.2004.

(சி-35377)(26-34-39-13)

கு.சரவணபவானந்தன்
ஜே.பி.
செயலாளர்.

உ
ஓம் சக்தி

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் உயர் திருவிழா
## 2004 ஆம் ஆண்டு தாரண வருடம்

| | | | |
|---|---|---|---|
| 18.06.2004 வெள்ளி | பகல் 12.00 மணி | - | கொடியேற்றம் |
| 24.06.2004 வியாழன் | இரவு | - | கைலைக்காட்சி |
| 27.06.2004 ஞாயிறு | பகல், இரவு | - | மஞ்சத் திருவிழா |
| 30.06.2004 புதன் | இரவு | - | சப்பறம் |
| 01.07.2004 வியாழன் | காலை 10.00 மணி | - | தேர் |
| 02.07.2004 வெள்ளி | காலை | - | தீர்த்தம் |
| | இரவு | - | கொடியிறக்கம் |
| 03.07.2004 சனி | இரவு | - | தெப்போற்சவம் |

குறிப்பு:- நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பெயரால் ஏமாற்றுப் பேர்வழிகள் எவரிடமும் எப்பொருளையும் வழங்கவேண்டாம் என அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம். நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினர் வழமைபோல் உற்சவ காலத்தில் சிறப்பாக இவ்வாண்டும் அன்னதானப் பணியினைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்வதாக அறிவித்துள்ளனர். அவர்களது தொண்டர்களை உறுதிப்படுத்தி வழமைபோல் அக்கைங்கரியத்திற்கு உதவுக.

**"அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக"**

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.
02.06.2004

(சி35378)(37-34-13-39)

- அறங்காவலர் சபை.

## வீரவணக்கம்



கிழக்குத் தமிழ் தேசியத்தின் பால் நின்று தமிழர் தேசியத்தை உள்ளூரிலும் உலகிற்கும் வெளிப்படுத்தி வந்த ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான

### ஐயாத்துரை நடேசன்

அவர்கள் அரச கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதோடு அவருக்கு எமது வீர வணக்கத்தைச் செலுத்தி நிற்கிறோம்.

காரைநகர் பிரதேசம். (சி-35380) (34-13-39) - வணிகர்கழகம்.

## அறிவித்தல்

கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
கோப்பாய்.

### கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்தல் - 2004/06/05

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20.02 இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் இவ்வட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம்: 2004.06.05 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி.**

கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ்வருமாறு:-

| தொ.இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 240 | கோப்பாய் வடக்கு | றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை கோப்பாய் வடக்கு. |
| 02. | 241 | இருபாலை | றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை கோப்பாய் தெற்கு. |
| 03. | 242 | நீர்வேலி வடக்கு | கலைஒளி சனசமூக நிலையம். நீர்வேலி வடக்கு. |
| 04. | 243 | நீர்வேலி தெற்கு | ஸ்ரீபரமேஸ்வரி சனசமூக நிலையம். நீர்வேலி தெற்கு. |
| 05. | 244 | ஊரெழு | காந்திஜி சனசமூக நிலையம். உரும்பிராய் கிழக்கு. |
| 06. | 245 | அச்செழு | வளர்மதி சனசமூக நிலையம். புலசிட்டி. அச்செழு. |
| 07. | 247 | டிப்போ | உதயசூரியன் சனசமூக நிலையம். செல்வபுரம். |
| 08. | 249 | கட்டப்பிராய் | சரஸ்வதி சனசமூக நிலையம். கட்டப்பிராய். |
| 09. | 250 | கோப்பாய் சந்தி | கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்க தலைமைக் காரியாலயம் |
| 10. | 252 | பொக்கணை | முத்தமிழ் சனசமூக நிலையம். பொக்கணை. |

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

(32659)(34-13-39)

கூட்டுறவுச் சேவையிலுள்ள
செயலாளர்.

## உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு!

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு 9″-1′-0 அளவிலான கண்டகல்லு தேவைப்படுகிறது. அதனை வழங்க விரும்புவோர் 05.06.2004 சனி மாலை 5மணிக்கு முன்பதாக தங்களது கூறுவிலையை கடித உறையிலிட்டு ஆலயத்தில் சமர்ப்பிக்கவும். அத்தோடு 06.06.2004 ஞாயிறு மாலை 5மணிக்கு அனைவரையும் ஆலயத்திற்கு சமுகம்தரும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை
மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலயம்,
மானிப்பாய்.

(32673)(35-34-19-13)


## கணணி விற்பனை

Powered by
ViewSonic
CREATIVE
AMD
Athlon, Duron
Intel
Pentium 4, Celeron

ரூ 39,000/= தொடக்கம்

உத்தரவாதம் 3 வருடங்கள் உத்தரவாதம்

**2.0Ghz, 2.4Ghz, 2.8Ghz, 3.0 Ghz**

15" Monitor, Mother board, 64MB VGA, 128 DDR, 40GB HDD, 52X CD ROM, 1.44 MB FDD, PS2 Keyboard, Mouse, Casing, Sound+Speaker.

கணனி கொள்வனவிற்கு கடன் வசதி ஒழுங்கு செய்து தரப்படும் 12,18,24 தவணைக் கட்டணங்கள்

TV Card, Woofers, UPS, Pen drives, Printers, Combo Drive, Digital Cameras, Scanners

மற்றும் அனைத்து கணணி உதிரிப்பாகங்களும்

**PC REPAIRS UPGRADES**

❖ MONITOR ❖ UPS ❖ PRINTER ❖ POWER SUPPLY ❖ SCANNER

திருத்தங்களுக்கு உத்தரவாதம்

- Memory Problems
- LCD Problems
- Virus Problems
- Internet and Email Setup
- Power Pack Problems
- Capture Card problems
- Display problems
- Windows problems
- Software Installations
- Memory errors
- Net-2-Phone configuration
- Battery Problems(Lap-top)
- Drivers installation



Lap-top hard disk Memory available for upgrading

நடமாடும் சேவை

உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து திருத்தித் தரப்படும்

உங்கள் அருகில் உள்ள கிளையை அணுகுங்கள்

எமது கொழும்புக் கிளைகளில் கொள்வனவு செய்யும் கணனிகளுக்கு உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் யாழ்நகர் கிளையில் வழங்கப்படும்.

MICRO Pc — மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

| யாழ்ப்பாணம் | வெள்ளவத்தை | கொட்டாஞ்சேனை |
|---|---|---|
| 175/3 கஸ்தூரியார் வீதி | 15. 36வது ஒழுங்கை | 82 புதுச் செட்டித் தெரு |
| 021 2225893 | 011-4513235 | 011-4613617 |
| 071 2374181 | 011-4516764 | 011-4619673 |

Dream Station



யாழ். நகரத்திலே

## Kodak DIGITAL

பிரதியாக்கும் இயந்திரம் மூலம் தெளிவான படங்களைப் பெற்றிட



இதோ உங்களுக்காக!




இன்று (03.06.2004) வியாழன் முதல் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில் உள்ள இல.482, சிற்றிபாமா கட்டடத்திலே ஆரம்பிக்கின்றோம். எந்தவிதமான பிலிம்றோல்கள் கொடுத்தாலும் மறுநாள் பிரதியாக்கம் செய்து உங்கள் கைகளில் கொடுக்கப்படும். அத்துடன் பெரிதாக்கல்களும் அவசர ஓடர்களும் உடனுக்குடன் **கொழும்புவிலையிலேயே** செய்து தரப்படும்.

1 Roll படத்துக்கு அழகிய பிளாஸ்ரிக் போட்டோ ஸ்ராண்ட் இலவசம்

வாடிக்கையாளர்களுக்கும் ஸ்ருடியோ உரிமையாளர்களுக்கும் விசேட சலுகையுடன் விசேட கவனிப்பு

18x12, 15x12, 15x10, 12x10, 12x8, 6R, 5R, 4R, 3R, 4UP, 8UP ஆகிய அளவிலான படங்கள் யாவும் உடன்செய்து தருவோம்.

அவசர படங்கள் 1 மணித்தியாலத்தில் செய்துகொடுக்கப்படும்.

எமது பிரதியாக்க நிலையம்:

SHANKO COLOUR LAB AND STUDIO
No:84, K.K.S. Road, Chunnakam.
T.P.:0777 - 280258.

SHONKO COLOUR LAB & STUDIO
No:204, Kandy Road.
Vavuniya. T.P.:024 - 2221130.

(32672)(34-13-37)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

வட்டு.கிழக்கு குளிப்பன் பகுதியில் நன்னீர்க்கிணறு மற்றும் பயன் தரு மரங்களுடன் கூடிய 12 பரப்புக்கு மேற்பட்ட காணி விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். தொடர்புகளுக்கு: வி.சச்சிதானந்தன், குளிப்பன் வதி, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை. (சி-35374)

நம்பர்1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 04.06.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32593)

புத்தம்புதிய Sony DVD Player, Aiwa CD Set, National Vacume cleaner, Lovebirds African Parrots, முயல் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P.222 2782. (32674)

### பொதுநூலகத்துக்கு 'லிப்ற்' வசதி

யாழ் பொது நூலகத்தின் மாடிக் கட்டடத்திற்கு மக்கள் செல்லும் பொருட்டு ' லிப்ற்' வசதி செய்யப்பட்டுள்ளது. (10-17)

### சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்.நாவலர் தர்மகர்த்தா சபையின் ஏறபாட்டில் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி வித்தியாலய வளாகத்தினுள் அமைந்துள்ள நால்வர் கோயிலில் அபிஷேகம் இடம்பெறுவதுடன் மாணவர்களது பேச்சு, பண்ணிசை ஆகியனவும் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து மாகேசுர பூசையும் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன்3

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பேச்சு மற்றும் திருமுறை ஓதல் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்3

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவப்புலவர் நித்திய தசீதரனின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (10-ரி)


**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**

*ஸ்ரீசோட்டாநிக்கரை பகவதி அம்மன் அருள் பெற்ற ஸ்ரீ வெட்காளி அம்மாவின் அருந்தவப் புதல்வன்*



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**N.A.லொட்ஜ், றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி, (ராஜா தியேட்டர் அருகில்) 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை)

(32663)(14-26)


உ

முருகன் துணை

## இணுவில் கந்தசுவாமி கோயில்
### *மகோற்சவம் – 2004*
## திருமஞ்சத் திருவிழா
### (12ஆம் நாள்)

| | |
|---|---|
| *காலம்:* | *2004–06–04 வெள்ளிக்கிழமை* |
| *முற்பகல்* | *9.00 மணி – 1008 சங்காபிஷேகம்* |
| *முற்பகல்* | *11.30 மணி – வசந்தமண்டப பூசை* |
| *மாலை* | *6.00 மணி – வசந்தமண்டப பூசை* |
| *மாலை* | *6.30 மணி – சண்முகர் அர்ச்சனை* |

பிரசித்திபெற்ற இணுவை மஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதரராக முன் இரவு 7.00மணிக்கு வீதிவலம்வரும் காட்சியை அடியார்கள் யாவரும் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இணுவில். - 12ஆம் திருவிழா உபயகாரர்.

(32640) (26-14)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர்

**திரு.க.தேவபாலன்** அவர்களின் தாயார்

**திருமதி கனகரத்தினம் பரமேஸ்வரி**


அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித ஹென்றியரசர் குடும்பம்
இளவாலை.

(சி35373)(37-14-26)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 04 - 1970



உதிர்வு 23 - 05 - 1997

**அமரர் கனகசபாபதி சத்தியநேசன்**

அன்பெனும் பிணைப்பினால் ஆசையுடன் எனை மணந்து
இன்பமுடன் எனக்களித்த இனிய நல் மகளுடனே
துன்பமெனும் கடலிலே தினமும் தத்தளித்தாலும்
பண்பான உங்களை பாரினில் மறப்போமோ

கலாஜினி (மனைவி),
விதூஷா (மகள்) குடும்பத்தினர்.

*கலாஞ்சலி,*
*அல்வாய்.* (சி-35375)

(34-14-26)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

### நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான

# கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 ஏப்ரல், மே, ஜூன மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென கீழ்த் தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏப்ரல் (MT) | மே (MT) | ஜூன் (MT) |
| 01. | சாவகச்சேரி | 185 | 185 | 185 |
| 02. | கைதடி | 52 | 52 | 52 |
| 03. | கொடிகாமம் | 151 | 151 | 151 |
| 04. | உடுப்பிட்டி | 24 | 24 | 24 |
| 05. | கட்டைவேலி - நெல்லியடி | 26 | 26 | 26 |
| 06. | பருத்தித்துறை | 95 | 95 | 95 |
| 07. | புலோலி | 16 | 16 | 16 |
| 08. | மருதங்கேணி | 92 | 92 | 92 |
| 09. | யாழ்ப்பாணம் | 109 | 109 | 109 |
| 10. | நல்லூர் | 50 | 50 | 50 |
| 11. | அச்சுவேலி | 52 | 52 | 52 |
| 12. | நீர்வேலி | 45 | 45 | 45 |
| 13. | மானிப்பாய் | 52 | 52 | 52 |
| 14. | பண்டத்தரிப்பு | 51 | 51 | 51 |
| 15. | அளவெட்டி - மல்லாகம் | 40 | 40 | 40 |
| 16. | தெல்லிப்பழை | 152 | 152 | 152 |
| 17. | சங்கானை | 75 | 75 | 75 |
| 18. | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19. | புங்குடுதீவு - நயினாதீவு | 14 | 14 | 14 |
| 20. | வேலணை | 35 | 35 | 35 |
| 21. | ஊர்காவற்றுறை | 36 | 36 | 36 |
| 22. | காரைநகர் | 30 | 30 | 30 |
| 23. | தீவகம் | 60 | 60 | 60 |
| 24. | நெடுந்தீவு | 3 | 3 | 3 |
| | மொத்தம் | 1500 | 1500 | 1500 |

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.06.03 ஆம் திகதி தொடக்கம் 2004.06.17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரச அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரச அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல்வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை **தலைவர்,** ***மாவட்ட கேள்வீச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)*** என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால்மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.18 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்வ' கள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
6. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்கமேல் மூலையில் ***"சிவப்பு நாட்டுபுழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி"*** என எழுதப்படல்வேண்டும்.
7. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல்வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சநதை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**01.06.2004.**

(சி-35369) (34-14-26)

**D.C.M**

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

**1 st in.Com.**
**G.A.Q.**
2005 கல்வியாண்டு

மேற்படி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணபிக்கமுடியும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 05.06.2004 சனி 9.00 மணி (ப.நே.)

**S.வரதராஜன்**
இயக்குநர்,
வணிக, முகாமைத்துவ
பட்டப்படிப்புக் கல்லூரி.
(32683)(34-13-17-37)



**நாகம்ஸ்** சுன்னாகம்



மாதவன்,
சதா,
விவேக்
நடித்த
எதிரி

காட்சிகள: 11.00, 3.00, 7.00
4 ஆம் திகதி முதல்
கில்லி
(சி-34180)(32)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்
சிம்பு,த்ரிஷா ரகுவரன்
விவேக்
நடித்த
அலை



காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பநே) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு
AMPRICAN PIE
(சி34420)(12)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

| மண்மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 14 |  | 06 |
| 12 | | 05 |
| 1955 | | 2004 |

எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி கிருஷ்ணதேவி சிவராஜா
**(மாலா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (04.06.2004) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நிறைவுறும். அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*நெ.ம.ம.வி.வீதி,*
*கரவெட்டி.* (c/35381)(35-113-17-37) குடும்பத்தினர்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

ஆதரவற்ற எமக்கு 'தாயகம்' இல்லத்தில் வளம் நிறைந்த
வாழ்வை அள்ளித்தந்த வள்ளற் பெருந்தகைகள்
திரு.திருமதி. சிறிதரன்- மைதிலி தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வன்

'செல்வன் **S. ஹரிஷ் ராம்** தனது
பிறந்த நாளை இல்லச் சிறார்களாகிய எம்முடன் 03.06.2004
பொன் மாலைப் பொழுதில் மிகவிமரிசையாகவும் குதூகலமாகவும்
எம் இல்லத்தில் கொண்டாடி மகிழ்கின்றார்.
நாம் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்
சின்னஞ்சிறு கண்மலரே
செம்பவள வாய் மலரே
சிரித்திடும் ஹரிஷ் குட்டியே
வள்ளல் பெருந்தகையின் வாரிசே! எம் இல்லம்
வந்து எம்மை வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் முத்தே!
எங்கள் சிறி மாமாவின் சொத்தே! உம்மை
வாழ்த்துவதற்கு எம் இதயங்கள் துடிக்கின்றன
எங்கள் இருள் அகற்றி ஒளிதரும் ஆதவனே
தாய் தந்தையிலும் விந்தை மிக்க சிந்தையுள்ள
கண்மணியே! வளம் பல தந்து வாழ்வளிக்கும் வரனே
பல்கலையும் கற்று வளம் பெற்றுப் பல்லாண்டு
வாழ்க வாழ்க வாழ்கவென இதயத்தின் உணர்ச்சித்
துளிகளால் வாழ்த்தி மகிழ்கின்றோம்
வாழ்க வைரக் கல்லே
ஒளிர்க எம் கண்களில்
என வாழ்த்துக் கூறும்



தாயகத்தின்
மழலைச் சிறார்கள்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08.12.1976 | 03.06.2003 |

### அமரர் தர்மலிங்கம் குணாளன்

(ஆதி மயிலிட்டி அமரர் ராஜாவினதும, வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் (வசாவிளான்) ஆகியோரின் பேரனும் திரு. திருமதி தர்மலிங்கம் -கஸ்தூரி தம்பதிகளின் மூத்த புதல்வனும்)


*அர்ச்சனா நேர்ஸிங் ஹோம்,*
*கே.கே.எஸ், வீதி,*
*மல்லாகம்.* (c/35382)(35-113-17-37))

மறையாத உங்கள் நினைவுடன்:-
குடும்பத்தினர்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

14; ஸ்ரீ வெங்கடேசன் வீதியில் வசிக்கும்
திரு.திருமதி சிறீதரன் மைதிலி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### ஹரிஷ் ராம்





தனது முதலாவது பிறந்தநாளை இன்று (03.06.2004) வியாழக்கிழமை
தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்
இவரை அன்பு அப்பா,அம்மா,தாத்தாமார்கள்,பாட்டிமார்கள்,
மாமாமார்கள்,மாமிமார்கள்,பெரியப்பாமார்கள்,பெரியம்மாமார்கள்,
சித்தப்பாமார்கள்,சித்திமார்கள்,மச்சான்மார்கள்,மச்சாள்மார்கள்,
அண்ணன்மார்கள்,அக்காமார்கள் மற்றும் உற்றார் உறவினர்,நண்பர்கள்
அனைவரும் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் அருளால்
சீரோடுஞ் சிறப்போடும் பல்கலையும் கற்று பல்லாண்டு
காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்

சிறிதரன் தம்பதிகள்
14,ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்
Tel: 021.2223493


**லக்சுமி** இணுவில்



சூரியா (2 வேடங்கள்),
ஜோதிகா நடித்த
பேரழகன் (ரீல்ஸ்)

(32687)(12)



**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன்,
மீரா ஜஸ்மின், சித்தார்த்,
த்ரிஷா மற்றும் பலர் நடித்த



ஆய்த எழுத்து (ரீல்ஸ்)

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/34517) (22)

# மரண அறிவித்தல்கள்



## முருகேசு கனகசிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கனகசிங்கம் (முன்னாள் உரிமையாளர் சிங்கம் மோட்டோஸ்) நேற்று (02.06.2004) புதன்கிழமை காலமானார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2004) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்கும்பான் மேற்கு,*
*வேலணை.* (32680) (26-12-11-40)

தகவல்:
க.சுகந்தன் (மகன்).

## கந்தையா இரத்தினம்

(ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர் Fic)

சுன்னாகம், கப்பம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் அவர்கள் 01.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும் ஞானசேகரத்தின் சகோதரரும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் குமுதினி, மாலதி, சுனிதா, சுகந்தி, பிரதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வரதராஜா (சவூதிஅரேபியா), தயாதரன் (கனடா), சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும் மிதுலா, கஜானி, கீர்த்தனா, துவாரகி, அபிசனா, பிரணாஸ், பிரசாங்கி, லோஜிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை (04.06.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.* (32694)(40-11-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனன் மகேந்திரன் (சைவம்).

## யோசேப் ஞானப்பிரகாசம்

சுன்னாகம், யஸ்தஸ் சின்னப்பு வீதியைச் சேர்ந்த யோசேப் ஞானப்பிரகாசம் நேற்று (02.06.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - மரியப்பிள்ளை தம்பதியினரின் மகனும் மரியநாயகத்தின் அன்புக் கணவரும் அருட்திரு. அற்புதராஜா (அ.ம.தி. - றோம்), அற்புதராணி (பிரான்ஸ்), அற்புத ஜெயசீலன், அற்புதஞானசீலன் (அஞ்சலர் - சுன்னாகம்), மரியசீலன் (உரிமையாளர் - சீலன் போட்டோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட்பிரகாசம் (சைப்பிரஸ்), சுகிர்த அலங்காரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், மாக்கிறற் மற்றும் வெலிச்சோர் ஆபரணம், மேரி சவிரீனா, ஞானமலா (மனைவி - ஜோர்ஜ் வைத்தியர்) ஆகியோரின் மைத்துனரும் மரியரட்ணம், றுபீனா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாத்துறின் (பிரான்ஸ்), பேணடேத் (பிரான்ஸ்), நோயல் (பிரான்ஸ்), ஜெறி போப்ஸ், அருட்சகோ. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி.) ஆகியோரின் அன்புப் பேரனாரும் அருட்திரு. அல்றின் (அ.ம.தி.)இன் அன்புச் சிறியதந்தையும் அருட்திரு. ஜெறோம் (அ.ம.தி.)இன் அன்பு மாமனாரும் அருட்திரு. றொபின்சன் ஜோசவ்வின் உறவினருமாவார்.

அன்னாரின் இறுதி யாத்திரைத் திருப்பலி இன்று (03-06-2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*யஸ்தஸ் சின்னப்பு வீதி,*
*சுன்னாகம்.* (32681)(26-40-11-12)

தகவல்:
அருட்திரு. அற்புதராஜா (அ.ம.தி.)
(மகன்).

## திருமதி பாலசுப்பிரமணியம் அன்னஜோதி

(ஜானகி)

யாழ்ப்பாணம், 17/5, செ‌ன். ஆன்ஸ் லேன், சுண்டுக்குளியைச் சேர்ந்த திருமதி பாலசுப்பிரமணியம் அன்னஜோதி (ஜானகி) அவர்கள் நேற்று (02.06.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா - அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் பாலசுப்பிரமணியம் (ஏயாபோஸ் பாலா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் கவிதா (பிரான்ஸ்), சித்திரா (ஜேர்மனி) காலஞ்சென்ற அசோகா மற்றும் வனிதா (பிரான்ஸ்), பிரசாத் (யாழ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராசா, இராஜலிங்கம் (சத்தி) ஆகியோரின் சகோதரரும் மகேஸ்வரி, கிருஷ்ணபவானி ஆகியோரின் மைத்துனியும் கபில (பிரான்ஸ்), அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.06.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை, துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/5,செ‌ன்.ஆன்ஸ் லேன்,*
*சுண்டுக்குளி.* (32690)(40-11-12)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## செல்வி இரஞ்சினிதேவி முத்துத்தம்பி



மட்டுவில்தெற்கைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்படமாகவும் கொண்ட செல்வி இரஞ்சினிதேவி முதத்துத்தம்பி அவர்கள் 01.06.2004 செவ்வாய்க்கிழமை திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சிவசுப்பிரமணியம், ராஜகோபால், சாரதாதேவி, இந்திரபவன், இரவீந்திரகுமார், சரோஜினிதேவி, கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாயகி, ரகுமணி, கணேசமூர்த்தி, வரதலட்சுமி, ஜேந்தினி, விமலச்சந்திரன், குமரகுருபரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் திருச்சியில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (32693)(38-11-36)

தகவல்:
சாரதாதேவி (சகோதரி),
இந்திரபவன் (சகோதரன்).

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்3

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையின் மேற்பிரிவுக்கான வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி கேமந்தராணி தியாகலிங்கம பரிசில்களை வழங்குவார்.

இதில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபாலவரணிதாஸன் சிறப்பு விருந்தினராகவும், நெடுந்தீவுக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.(எ)

## தபாலகத்தை இடம்மாற்ற நடவடிக்கை

தெல்லிப்பழை,ஜூன்3

சுன்னாகம் தபாற்கந்தோரை தகுந்த இடம் ஒன்றிற்கு இடம்மாற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கத திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான நடவடிககைகளை ஆராயும் கலந்துரையாடல் எதிர்வரும் ஐந்தாம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு, சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் தபாலதிபரின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா க.சிவாஜிலிங்கம் மற்றும் திட்டமிடல் அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோா கலந்துகொள்ளவுள்ளனர். (4-150)

## இலவச பண்ணிசை வகுப்பு

தெல்லிப்பழை,ஜூன்3

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயத்தினரால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பி.ப. 5.00 மணிக்கு இலவச பண்ணிசை வகுப்பு நடத்தபபட்டு வருகிறது.

தேர்ச்சி பெற்ற ஓதுவார் ஒருவரால் இப்பண்ணிசை வகுப்பு நடத்தப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (4-150)

**Spoken English**
**Lectured:**
**By: NISHANTHAN**
(Dip.IN.English)

**நேற்று நடைபெற இருந்த வகுப்பு இன்று ஆரம்பம்**

1. BARATHY சித்தன்கேணி
3.00 p.m.

2. பொருளியற்கல்லூரி - இணுவில்
4.00 p.m.

(32689)(36)

# மரண அறிவித்தல்

## நடராசா கந்தையா

கைதடியைச் சேர்ந்த நடராசா கந்தையா அவர்கள் நேற்று (02.06.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் அருளையாவின் சகோதரனும் பொன்னம்மாவின் மைத்துனரும் குணராசசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், தென்மராட்சி மேற்கு M.P.C.S.), தனபாலசிங்கம் (பிரதேச சபை கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமலர், நேசராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகஜன் (தரம்10 யாழ்.மத்திய கல்லூரி), சிந்துஜா (தரம்5 விக்னேஸ்வரா வித்.கைதடி) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பொன்னையா (புன்னாலைக் கட்டுவன வடக்கு), தம்பிப்பிள்ளை (கைதடி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.1.00 மணிக்கு உற்றலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனபாலசிங்கம்
(மகன்).

*கைதடிகிழக்கு,*
*கைதடி.* (32696)(36-11-12)



உ
தில்லையம்பதியாள் துணை
சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
**அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில்**

**வைகாசி மகோற்சவ பூங்காவனப் பெருவிழா-2004**

இன்று (03.06.2004) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு அம்பாளுக்கு விஷேட பூசைகள் நடைபெற்று, மதியம் மாகேஸ்வர பூசையும் (அன்னதானம்) மாலை 7.30 மணிக்கு அம்பாளுக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் அம்பாள் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சியும், தொடர்ந்து இரவு நிகழ்வுகளாக

★ மங்கள இசை
★ கௌரவிப்பு விழா
★ பரிசளிப்பு விழா

தென்னிலங்கையின் முன்னணிப் பாடகர்களுடன்
வவுனியா இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் ராகஸ்வரம்
இன்னிசை கானங்கள் இடம்பெறும்.

பரிபாலனசபை,
தில்லையம்பதி. (32691)(38-11)

- பூங்காவன விழாக் குழு.

உ
சுழிபுரம் - பறாளாய்
**சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்**
**மகா சங்காபிஷேகம் - 1008**

**முருகன் அடியார்களே!**

சுழிபுரம், பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகா சங்காபிஷேகம் தாரண வருடம் வைகாசித் திங்கள் 22 ஆம் நாள நாளை (04.06.2004) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

மகா சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து எம் பெருமானுக்கு சண்முகா அர்ச்சனை நடைபெறும். பின்னர் நண்பகல் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மாலை 5.00 மணிக்கு விசேட மேளக்கச்சேரி இடம்பெறும். ஆலய மேளத்தைத் தொடர்ந்து K.R.சுந்தரமூர்த்தி குழுவினர், கோண்டாவில் பஞ்சமூர்த்தி குழுவினர், அளவையூர் S.S.சிதம்பரநாதன் குழுவினர், வழக்கம்பரை சிவகுமார் குழுவினா ஆகியோரின் மேளக்கச்சேரி நடைபெறும்.

முன்னிரவு விசேட பூசையைத் தொடர்ந்து வள்ளி - தெய்வயானை சமேதரராக முருகன் பூந்தண்டிகையில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்மழை பொழிவார்.

**அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!**

சுழிபுரம். (சி-35385) (34-12-38-36)

- அறங்காவற்குழு.

# கண்ணீர் மல்கிய விழிகளுடன் எம் கண்ணீர்க் காணிக்கைகள் உரித்தாகுக



எமது சக வர்த்தகர் திரு.ஐ.சிவநாதன்
அவர்களின் சகோதரன்
அன்புக்கும் பண்புக்கும் பெருமதிப்புக்கும் போற்றப்படும்

## திரு.ஐ.நடேசன்

கடந்த திங்கட்கிழமை 31.05.2004 மண்ணைவிட்டு விண்சென்று நாலு நாள்களும் கடந்ததே. நெல்லை மக்கள் அனைவருடைய இதயங்களிலும் உங்கள் நினைவு தணலாய் தகித்து நிற்கின்றது. உங்கள் உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஏன் பிற நாடுகளிலும் கூட கலங்கி அழுது கண்ணீர் மல்கி நிற்க, எம்மையெல்லாம் ஒரு பொழுதில் விட்டுவிட்டு விண்ணுலகம்தான் சென்றது எம்மால் தாங்க முடியவில்லையே!

மீண்டும் மறுபிறப்பிலும் எம்மண்ணில் தவழ்ந்திடவும், உமது ஆத்மா சாந்தியடையவும், இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

நெல்லை சில்க்,
நெல்லியடி.

(சி-35386)(36-12-38)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் மகாலட்சுமி (ராசு)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் லேன் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மகாலட்சுமி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கந்தர்மடம் சுப்பிரமணியம் - சுந்தரம்மா (காலஞ்சென்ற) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் (வெற்றிலைக் கடை யாழ்ப்பாணம்/திருநெல்வேலி மார்க்கெட்) அன்பு மனைவியும் திருச்செல்வி (கனடா), கலைச்செல்வி, முத்துலிங்கம் (ஜேர்மனி), மகேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மபுத்திரன் (கனடா), சோமேஸ்வரன், கலாராணி (ஜேர்மனி), கமலாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிஷானா, அகிஷன், அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), சரண்யா, கௌஷிகன், மிதுஷன், கவிஷன், அனுஷியா, அனுஜன், ஆரணி ஆகியோரின் அன்புப பேர்த்தியும் அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி (கி.அ.ஜே/104, கந்தர்மடம்) ஸ்ரீஸ்கந்தராஜா (முஸ்லிம் கலாசார அமைச்சு), யோகலட்சுமி (பிரான்ஸ்), நிததியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரத்தினம், கனகசபாபதி, தனலட்சுமி, யோகராஜா (பிரான்ஸ்), ஜெயராஜசிங்கம், ராஜேஸ்வரி (பாக்கியம்), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வராஜா - சுகந்தி, ஜெயக்குமார் - ஜெயந்தி காலஞ்சென்ற ஜெயக்குமார், பிறேமதாசன் - ஆனந்தி, சுகுமார், சுரேஷ்குமார் - அருந்ததி, ஜெகதீஸ்வரன், ஸ்ரீலக்ஷ்மி ஆகியோரின் சிறியதாயாரும் சித்திரா, வத்சலா (பிரான்ஸ்), ராஜன் - சுகி (ஹொலண்ட்), விமல் - ராஜி, காயத்திரி ஆகியோரின அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2004) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோண்டாவில் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இராமநாதன் லேன்,*
*இருபாலை.*
தொ.பே.0776241854/
0776777198 (சி-35388)(36-11-12)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

# எதிர் நடவடிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் மேற்கண்டவாறு தம்மிடம் தெரிவித்தார் எனச் சந்திரசேகரன் கூறினார்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக் குறித்து சந்திரசேகரன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சமாதானம் என்ற போர்வையை வெளியே காட்டிக்கொண்டு தனது தந்திர நடவடிக்கைகள் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்திவிடலாம் என்று அரசு எண்ணுகின்றது எனக் கூறிய தமிழ்ச்செல்வன், ஆனால் அந்த முயற்சி புலிகளிடம் பலிக்காது என்றும் குறிப்பிட்டார்.

சமாதானக் கோஷத்தை வெளியே எடுததியம்பியபடி வெளிநாட்டு உதவிகளைச் சுருட்டிக் கொள்ளவும் சந்திரிகா அரசு திட்டமிடுகின்றது என அவர் கூறினார்.

யுத்தநிறுத்தம் நீடிப்பதால் - சமாதான முயற்சிகளை முன்னெடுக்காமலேயே - இந்த அமைதிச் சூழலைப் பயன்படுத்தி ஆட்சியைக் கொண்டிழுக்க சந்திரிகா அரசு முயன்றாலும் அத்தகைய போக்குக்கு இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் என்னிடம் சொன்னார்.

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களும், மலையக மக்கள் முன்னணியின் எம்.பிக்களும் ஒன்று சேர்ந்து புதுடில்லிக்குச் சென்று இங்குள்ள அரசியல் நிலைவரங்களை புதுடில்லி அரசுக்கு தெளிவுபடுத்தலாம் என்ற யோசனையை இச்சந்திப்பில் முன்வைத்தேன்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையகத்தில், மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பு தார்மீக ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் தெரிவித்தேன்.

இந்த இரு விடயங்கள் குறித்தும் வெள்ளியன்று (நாளை) தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைத் தாம் கிளிநொச்சியில் சந்திக்கும்போது கலந்துரையாடி அதன் பின்னர் முடிவுகளைத் தெரிவிப்பார் எனத் தமிழ்ச்செல்வன் என்னிடம் சொன்னார்.

-இவ்வாறு தகவல் வெளியிட்டார் சந்திரசேகரன் எம்.பி.

(எ-க-9)

# விபத்தில் இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்3

நீர்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரான நீர்வேலியைச் சேர்ந்த தங்கராஜா சுரேஸ்குமார் (வயது-18), ஓட்டோவைச் செலுத்தி வந்தவரான ஆர்.கந்தசாமி (வயது-55) ஆகிய இருவருமே இவ்வாறு படுகாயமடைந்தவர்களாவர். (எ-7)

# வாய்பேச இயலாத சிறுமி வல்லுறவுக்குப் பின் கொலை

## வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா,ஜூன்3

வவுனியா, தாளிக்குளம் பகுதியில் நேற்று, வாய்பேச இயலாத சிறுமி ஒருவர், இனந்தெரியாத நபரினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டபின் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாளிக்குளம், மீள்குடியேற்ற கிராமத்தில் வசிக்கும் கிருபாகரன் ஜனிட்டா (வயது 15) என்ற சிறுமியே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சிறுமி ஆடுகளை மேய்ப்பதற்காக நேற்று வீட்டில் இருந்து சென்றார் என்றும் -

மாலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று வவுனியா பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்தை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேலும் நேரில் சென்று பார்வையிட்டார்.

(9-164)

# பாதுகாப்பு ஒப்பந்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேச ஒப்பந்தத்துக்கு இலங்கைத் தரப்பில் காட்டப்படும் அதீத ஆர்வத்துக்கு சாதகமான பதில் புதிய இந்திய அரசிடமிருந்து தெரிவிக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை ஏற்கனவே சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளுக்குத் தனது பதில் பரிந்துரைகளை இந்தியா தற்போது வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இரு அரசுகளினதும் பிரதிநிதிகளும் விரைவில் உத்தியோகபூர்வமாகக் கூடி இந்த ஒப்பந்தத்தை மேம்படுத்துவதற்கான திருப்பங்கள் குறித்துக் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான திகதி குறித்தும் முடிவுசெய்யப்படும் எனக் கூறப்பட்டது. நேற்றுவரை இந்தியாவில் விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இவ்விடயம் தொடர்பில் இந்தியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப்முகர்ஜியுடன் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்ற தகவலை உறுதி செய்துள்ளார்.

இந்த விவகாரங்கள் குறித்து இந்திய மத்திய அரசும், இந்திய பாதுகாப்பு அமைச்சும் எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசுத் தரப்புடன் நடத்தும் பேச்சுக்களின் விவரம் இந்திய மத்திய அரசின் கூட்டணிக் கட்சிகளாக இருக்கும் தமிழ்நாட்டுக் கட்சிகளுக்கு விளக்கப்படும் என்று நட்வர்சிங் கூறியுள்ளார்.

அதேசமயம், இலங்கையோடு இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதை புதிய இந்திய அரசில் இடம்பெற்றுள்ள தமிழ்க் கூட்டணிக் கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

# தமிழீழ மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் யாழ் மாவட்டத்தில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட ஏற்பாடாகியுள்ளது. இதன் முதற்கட்டமாக மாணவர்கள் தத்தமது பாடசாலைகளில் அலங்கார வளைவுகளை அமைக்கவுள்ளனர்.

பிரதான நிகழ்வுகள் வலய ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ் வலய நிகழ்வு - யாழ் இந்துக் கல்லூரியிலும், வடமராட்சி வலய நிகழ்வு - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சி வலய நிகழ்வு - சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வலிகாமம் வலய நிகழ்வு - யாழ். சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், தீவக வலய நிகழ்வு - வேலணை மத்திய கல்லூரியிலும் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இறுதி நாளன்று ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் இருந்து மாணவர்கள் எழுச்சி ஊர்வலமாக புறப்பட்டு மேற்படி பாடசாலைகளை வந்தடைவர்.

காலை நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது எழுச்சி உரைகளும், மாணவர் எழுச்சி நாள் பிரகடனமும் வெளியிடப்படும். இதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகள் யாவும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் காவலரண்களாய் விளங்கும் எமது பாடசாலைகளை மீட்டெடுப்பதற்கும் தமிழீழ மாவணவர்களின் கல்விமீது சிங்களப் பேரினவாத அரசுகள் பிரயோகிக்கும் ஒடுக்குமுறைகளை சர்வதேச சமூகத்திற்கு தெரிவிப்பதற்கும் மாணவர்களும் கல்வியலாளர்களும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுததுவர். இம்முறை தமிழீழ மாணவர் தினம் விடுமுறை நாளாக இருப்பினும எமது உணர்வலைகளை வெளிப்படுதத அணிதிரண்டு வருமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# நடேசனின் இறுதிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கியாப்பா, யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், செ.கஜேந்திரன், க.சுரேஸ் பிரேமச்சந்திரன், என். ரவிராஜ், கி.சிவனேசன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, அரியாலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தல்களில் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

யாழ். நகருக்கு நேற்றுமாலை எடுத்துவரப்பட்ட பூதவுடல் ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதியூடாக புனாலைக்கட்டுவனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து புத்தூர் வீதி ஊடாக அச்சுவேலி பஸ்நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் பூதவுடல் நேற்றிரவே ஐ.நடேசனின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. பெருமளவில் மக்கள் கூடி அஞ்சலி செலுத்தினர்.

பூதவுடல் தாங்கிய ஊர்தி சென்ற வீதிகள் எங்கும் மக்கள் இருமருங்கிலும் கூடிநின்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இன்று நெல்லியடியில் உள்ள அவரது இல்லத்தில் பூதவுடல் முற்பகல் 10மணிவரை அஞ்சலிக்காக வைகப்படும். பின்னர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வதிரி ஆலங்கட்டை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

வடமராட்சியில் வாழைகள், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. வடமராட்சி சோபை இழந்து காணப்படுகின்றது. (ஒ-3-5-7-117-ரி)

# வடக்கில் துக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள வியன ஆராய்ச்சி, ச.இரத்தினலிங்கம், எஸ்சசிகுமார் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

அமரர் நடேசனின் பிரதிமைப் படதத்திற்கு விடுதலைப் புலிகளின் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருண்யா சுடரேற்றினார்.

**வவுனியாவில் கடையடைப்பு**

பத்திரிகையாளர் நடேசனின் படுகொலையைக் கண்டித்து வவுனியாவிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. முக்கிய பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

வவுனியாவில் போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. வவுனியா நகரம் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

**அம்பாறையில் பேரணி**

கிழக்கின் மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையைக் கண்டித்து மூவினங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் நேற்று அம்பாறை நகரில் ஆர்ப்பாட்டப பேரணி ஒன்றை நடத்தினர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில பெரும் எண்ணிக்கையான சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

பேரணியில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் நடேசனின் படுகொலையைக் கண்டித்து கோஷங்களை எழுப்பியதுடன், பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்திச் சென்றனர்.

★ "அன்று நிமலராஜன், இன்று நடேசன் - நாளை யாரோ?"

★ "அரசே! நடேசனைக் கொன்றவர்களைக் கண்டுபிடி"

★ "ஆயுதக் கும்பல்களே ஊடகத் துறையினர் மீது கைவையாதே"

★ உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கு தண்டனை மரணமா?"

★ சுதந்திர ஊடகவியலாளர்களைப் பாதுகாப்போம்"

போன்ற சுலோகங்கள் மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. சிங்கள ஊடகவியலாளர்கள் சிலர் தமிழ்மொழியில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும், தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சிலர் சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

மேற்படி கண்டனப் பேரணியை ஆதரித்து அம்பாறை நகரில் கடைகள் யாவும் பூட்டப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அம்பாறை மாவட்ட செய்தியாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் வசந்தசந்திரபால ஆர்ப்பாட்டப் பேரணிக்குத் தலைமை வகித்தார்.

(எ-3,5,14,117,70,135,164,173,187)

# நடேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களும் பங்குபற்றி தமது உணர்வலைகளை வெளியிடும் வகையில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் எம்.இளம்பிறையன் தெரிவித்தார்.

இந்தப் பேரணிக்கு முன்னோடியாக இன்றுமுதல் பல எதிர்ப்பு நடவடிக்கைகளை குடாநாட்டில் முன்னெடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (எ-3-173)


ஈசன் கல்வி நிலையம்
பௌதிகவியல்
A/L 2005, 2006
சடப்பொருளியல்
திரு. குமரன் (B.Sc.)
SAT., SUN.: 4.00p.m.
ஆரம்பம்: 05.06.2004 (SAT.) 4.00 p.m.
(32623)(38)

பொருளியற் கல்லூரி
யாழ்.நகரில்
★ SPOKEN ENGLISH ★
LECTURED:
BY: NISHANTHAN
(Dip. in English)
புதிய பிரிவு ஆரம்பம்:
05-06-2004
சனி 4.00 (ப.நே.)
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.


# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை நடேசன்



(ஊடகவியலாளர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நடேசன் 31.05.2004 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2004) வியாழக்கிழமை காலை 10மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமகள் வீதி,
நெல்லியடி.

தகவல்:
ஐ.சிவநாதன்
(மருதம்).

(சி-35387) (11-12-33)

## அருணாசலம் யோகநாதன்

(பிரபல தேங்காய் வியாபாரி)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் யோகநாதன் நேற்று (02.06.2004) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தனலக்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அருணாசலம்-பரமேஸ்வரி தம்பதிகளின் மகனும் சுஜாத்தா, பாலமுருகன் (பிரான்ஸ்), திருமுருகன் (லண்டன்), செந்தில்குமரன், தவக்குமரன், அருள்குமரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரனின் (அராலி இந்துக் கல்லூரி) மாமனாரும் பிரவீனின் அன்புப் பேரனும் விஜயலக்சுமி, சுகிர்தலக்சுமி, புஸ்பராணி, கார்த்தியேசு, கமலராணி ஆகியோரின் சகோதரனும் சுந்தரமூர்த்தி, கந்தசாமி, காலஞ்சென்ற விசுவரத்தினம் மற்றும் செல்வராணி, தர்மதேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சங்கரத்தை வழுக்கியாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(சி-32697) (29-11-12-33)


COMPUTER COURSES
கணனி வகுப்புகள்
➢ Ms.Office.
➢ DTP.
➢ Hardware
➢ Internet & E-Mail.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 06.06.2004
UNIVAC
College Of Computer Information Technology
Vaddukoddai Rd. Sithankerny.

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2006 பிரிவு 2
★ தமிழ் ★
★ ஆசிரியர்: N.பாலா ★
ஆரம்பம்:05-06-2004 சனி 2.30 p.m.
(32616)(12)

SPOKEN ENGLISH
i) A/L பரீட்சை எடுத்தோர்
ii) உயர்கல்வி தொடருவோர்
iii) உத்தியோகத்தர் ஆகியோருக்கான விசேட ஆங்கில வகுப்புகள், ஆங்கில இலக்கியம் துரித மீட்டல். IELTS, TOEFL.
ஆரம்பம் : 05.06.2004
இருபாலாரும் அனுமதிக்கப்படுவர்
ஆசிரியர்:
S.தெய்வதவபாலன்
Jaffna Technical Institute
#367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3335 (சி-32675)

நாடகமும் அரங்கியலும்
BY:P.கணேஸராஜா B.A.(HONS)
A/L 2005இற்கான புதிய பிரிவு சனி/ஞாயிறு.
ஆரம்பம்:5.6.2004
இடம்:யாழ்ப்பாணக்கல்லூரி (பட்டப்படிப்புப்பிரிவு)
(யாழ்.போதனாவைத்தியசாலை முன்பாக)
நேரம்:3.30மணி (புதிய நேரம்).
(32597)(17)

SPOKEN ENGLISH & GRAMMAR
BY: S.B.Sasi
O/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிற்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள்
05-06-2004 ஆரம்பம்.
NEW HARY'S INSTITUTE
Vaddukoddai Road, Sithankerny.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.